Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி09வெள்ளிக்கிழமை (25-09-1998)UTHAYAN A Lively National Tamil Daily சுடர்:258

யாழ்ப்பாண... நல்லூர் பிரதேச நூலகம்.

## சூடானாட்டில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம்!

### நேற்று சிறுவன் ஒருவன் மரணம்

யாழ்ப்பாணம், செப்: 25

யாழ். மாவட்டத்தில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலை மரணமானார்.

இதனை அடுத்தே மேற்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாந்திபேதி நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சில ஆலோசனைகளைச் சுகாதாரப் பகுதியினர் மக்களுக்கு தெரிவித்துள்ளனர்.

அந்த ஆலோசனைகள் வருமாறு:-

★ இத்தினங்களில் சில பிரதேசங்களில் வாந்திபேதி பரவலாக வியாபித்துக் கொண்டிருப்பதனால் நீர்த்தன்மையாக மலம் வெளியேறினால் நீங்களும் அந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்கள் எனக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொலிஸில்சரண்!

### நேற்று நீதிமன்றில் ஆஜர்

தென்மராட்சி, செப்: 25

சாவகச்சேரியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவத்தையடுத்து காணாமல் போயிருந்த சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் பொன்னையா அன்ரன் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் தனது தாயாருடன் சென்று சரண் அடைந்தார்.

சாவகச்சேரிப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர் பலத்த பாதுகாப்புடன் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு சாவகச்சேரி நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

எதிர்வரும் முதலாம் திகதி வரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்திருந்த சிப்பாயான விஜயரத்தின மரணமானதாக நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டபோது அவரின் பிரேத பரிசோதனையை கொழும்பு சட்ட வைத்திய

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகம் முன் இன்று மறியல்!

## செம்மணி புதைகுழி விவகாரத்தில் கால தாமதம் செய்வதற்கு கண்டனம்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 25

செம்மணிப்புதைகுழிகளைத் தோண்டுவதில் காலதாமதம் செய்யப்படுவதையும் வடக்கில் கைதானோரை தேடிக்கண்டு பிடிப்பதில் ஆர்வம் இன்றி இருப்பதையும் — கண்டித்து யாழ். சோமசுந்தரம் அவென்யுவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக இன்று பொது அமைப்புகள் சாத்வீகமான முறையில் மறியல் போராட்டம் நடத்தவுள்ளன.

யாழ். மாவட்ட அரசசார்பற்றநிறுவனங்களின் இணையம், யாழ். மாவட்ட கைதானோர் காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம், நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு, கத்தோலிக்க மறை மாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு, அன்னையர் முன்னணி போன்ற பல அமைப்புகள் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றவுள்ளன.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குஞ்சுக்குளம், ஒலுமடு பகுதிகளில் மோதல்!

கொழும்பு, செப். 25

குஞ்சுக்குளம் மற்றும் ஒலுமடுப் பகுதிகளில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து குஞ்சுக்குளத்துக்கு வடமேற்கே மற்றும் மாங்குளத்துக்குக் கிழக்கே, ஒலு

( 10 ஆம் பக்கம் பார்க்க )

## ஜயலத்தின் கோரிக்கைக்கு இன்னும் பதிலில்லை

கொழும்பு, செப். 25

மடுத்தேவாலயப் பகுதிக்கு எதிர்வரும் ஐந்தாம் திகதி செல்வதற்கு ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா சமர்ப்பித்துள்ள அனுமதி விண்ணப்பம் குறித்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு வேண்டாம் என கோரி கேகாலையில் நேற்றுப் பேரணி

### பௌத்த பிக்குகளும் கலந்து கொண்டனர்

கொழும்பு, செப். 25

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையுடனோ அல்லது நிபந்தனை இன்றியோ எந்த விதமான பேச்சுவார்த்தையும் நடத்தக் கூடாது என்று கோரி கேகாலை மாவட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான பௌத்த பிக்குமார் உட்பட பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

சிங்கள இனத்தை காட்டிக் கொடுப்பதற்காக ரணிலுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் எந்த விதமான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மோதலில் சிக்கி இரு பொதுமக்கள் உயிரிழப்பு

### வாகரையில் நேற்று சம்பவம்

மட்டக்களப்பு, செப். 25

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் நேற்றுக் காலை வீதிக்கண்காணிப்புப் பணிக்குச் சென்ற படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் சிக்கி இருவர் உயிரிழந்தனர்.

சிவலிங்கம் சரோஜினிதேவி (34 வயது), நல்லதம்பி சோதிலிங்கம் (14 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இச்சம்பவத்தில் காயம் அடைந்த ஐவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட சேத விவரம் குறித்து தெரியவரவில்லை.

(இ-3-21)

## வடக்கு - கிழக்கு ஆளுநர் ராஜினாமா செய்வார்?

கொழும்பு, செப். 25

''வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரி ஒருவரின் ஊழல் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு சமர்ப்பித்த கடிதத்துக்கு 3 மாதமாகியும் பதில் கிடைக்காததால் நான் ஆளுநர் பதவியில் இருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.''

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி பணிப்பாளர்களுக்கு நியமன கடிதம் கையளிப்பு

திருகோணமலை, செப். 25

எதிர்வரும் முதலாம் திகதி அமுலுக்கு வரும் வலயக் கல்வி நிர்வாகமுறையின் கீழ் வலயக்கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

இப்புதிய நிர்வாக முறையின்படி யாழ். மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஐந்து கல்வி வலயங்களில் வலயம் ஒன்றுக்கு கலாநிதி என். தணிகாசலம்பிள்ளையும்—

வலயம் இரண்டுக்கு வி. இராஜையாவும்—

வலயம் மூன்றுக்கு எஸ். சிவராசாவும்—

வலயம் நான்குக்கு எஸ். செல்வராசாவும்—

வலயம் ஐந்துக்கு எஸ். விக்கினேஸ்வரனும் — நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலும், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களிலும் இன்னமும் வலயப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை.

(இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலிருந்து வந்தவர் காணாமற்போய்விட்டார்

## ஆணைக்குழுவிடம் முறையீடு

வன்னியிலிருந்து சொந்த இடம் திரும்பிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடல் நீரேரி ஊடாக வன்னியிலிருந்து திரும்பிய மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் சிறிஸ்கந்தராசா (வயது 34) என்பவர் குருநகர் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்ட பின்னர் தனது சொந்த இடமான சாவகச்சேரியில் சென்று வசிப்பதற்கு அனுமதிக்கப் பட்டார். இவர் குருநகரிலிருந்து வெளியேறும் போது இவரது அடையாள அட்டையை பெற்ற இராணுவத்தினர் அதற்கு பதிலாக துண்டு ஒன்றை வழங்கினார்கள்.

அத்துண்டுடன் சாவகச்சேரியில் வசித்து வந்த அவர் கடந்த 4 ஆம் திகதி மல்லாகத்திற்கு சென்று விட்டு திரும்பும் வழியில் காணாமல் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் காணாமல் போனது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் அவரது தாயாரான திருமதி இரத்தினம் கனகம்மாவினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# உரும்பிராய் வீட்டில் திருட்டு

உரும்பிராய், செப். 25

உரும்பிராய் வடக்கிலுள்ள ஒரு வீடடினுள் கடந்த செவ்வாய் இரவு கூரையிலுள்ள ஒடுகளைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் பெறுமதி மிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர்கள் வீட்டின் முன்புறத்தில் இரவு நித்திரை செய்ததனால் திருடர்களுக்கு வசதியாகப் போய்விட்டது.

அண்மையில் இப் பகுதியில் திருட்டுக்களில் ஈடுபட்டதாக ஏழுபேர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருட்டு முயற்சிகள் தணிந்திருந்தன. இப்போது இது மீண்டும் தலை தூக்கியுள்ளது. (ஐ-154)

# 7 ஆயிரம் சிறுவருக்கு சொட்டு மருந்து

வடமராட்சி, செப். 25

வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களில் 7 ஆயிரத்து 418 சிறுவர்களுக்கு போலியோ சொட்டு மருந்து கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டது. 27 நிலையங்களில் வைத்து சொட்டு மருந்து வழங்கப் பட்டது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 6 நிலையங்களில் வைத்து போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

(ஐ-173-109)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நமக

## இதய பூர்வமான நன்றிகள்

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் எனக்கு "கலாபூஷண விருது" வழங்கப் பட்டபோது, அதனைப்பாராட்டி உதயன் பத்திரிகை மூலமாக வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டவர்களுக்கும், எனது மணி விழாவை முன்னிட்டு வைபவம் ஒன்றை சிறப்புற நடத்திய திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய சமூகத்தினருக்கும் எனது மனமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

கலாபூஷணம்,
ஆறுமுகம் ஜீவரட்ணம்.
(ஆச்சாரியார்)

ஆறுமுகம் சிற்பாலயம்,
காளிகோயிலடி,
திருநெல்வேலி.

(சி/4980)


யாழ்ப்பாணம்
மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1998 ஆம் ஆண்டு, 3 ஆம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30-09-1998 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாத்துக் கட்டணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | — 15% |
| ஏனைய காணிகள் | — 20% |

காசோலையாகச் செலுத்த விரும்புவோர் 'மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்' என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

த. தனரஞ்சிதராஜன்,
பதில் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

24-09-98. (சி/4979)

யா / கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயத்தின்

## விஞ்ஞான மன்றம்

நடத்தும்

## ஒட்ட மின்னியல் பயிற்சிப் பட்டறை

02-10-1998 — 03-10-1998 திகதிகளில் மேற்படி பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் க. பொ. த. (சா/த) மாணவர் நால்வரினதும், க. பொ. த. (உ/த — 2000) மாணவர் நால்வரினதும், விஞ்ஞான ஆசிரியர்கள் இருவரினதும் பெயர்களை எமக்கு அறியத்தரவும்.

30-09-1998 இற்கு முன்பதாக உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

— அதிபர்

★ பதினாறு செயற்பாடுகளுக்கூடாக நேர்கோட்டு இயக்கம் பற்றிய எண்ணக்கருக்களைக் கட்டியெழுப்பக் கூடிய கையேடுகளுக்கு பாடசாலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

(59411)


## ஸ்ரீ செல்வா

சினிமா
யாழ்ப்பாணம்.
10-30 — 2-30 மணி.
(பழைய நேரம்)
இன்றைய புதிய வெளியீடு!
பிரசாந்த் - சிம்ரான் நடிக்கும்
கண்ணெதிரே தோன்றினாள்
(CD பிரதி)
(59417)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
இன்று முதல்
சிவாஜி - ராதா
சத்தியராஜ் நடித்த
முதல்மரியாதை
(ரீலீஸ்)
காட்சி: 10-30, 2-30
(59408)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
சத்தியராஜ்
(இரு வேடம்)
கஸ்தூரி, சுஜாதா
நடித்த
அமைதிப்படை
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4926)

## விக்னா

கல்வி நிறுவனம்
அளவையியல்
திரு. சயந்தன்
A/L 99 (3.30-5.00)
A/L 2000
(8.00 - 9.00)
ஆரம்பம்: 26 - 09 - 98
(59413)

புலமைப்பரிசில்—1998
4ஆவது பரீட்சையில்
அதி கூடிய புள்ளி
பெற்றோர்

1. தங்கராசா டேசிகா
யா/ ச. ஆ. மி. த. க. பா.
2. மாரிமுத்து சொரூபினி
யா/ ந. ஆனந்த வி.
3. விஜயரட்ணம் யசிந்தன்
யா/ பரி. கல்லூரி
4. நந்தகோபால் ரேகா
யா/ இ. ஆ. பா.
5. தியாகராஜா பிரசாந்தன்
யா/ ஆ. மெ. மி. பா.
6. காந்தியழகன் பங்கஜன்
யா/ இ. ஆ. பா.

அடுத்த பரீட்சை
27 - 09 - 98

BOND
(59414)


# மரண அறிவித்தல்கள்

## தம்பிஐயா சற்குணானந்தன்

(யாழ். மாநகர சபை நீர் வேலைப்பகுதி மேற்பார்வையாளர்)

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாசவும் கொண்ட தம்பிஐயா சற்குணானந்தன் நேற்று 24-9-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிஐயா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி கனகரட்ணம் தம்பதிகளின் மருமகனும், சுதாமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தினேஷ் மற்றும் நிரோஸ், உமேஸ் (யாழ். மத்திய கல்லூரி), சுபேஸ், தனா (யாழ். சென் ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்), சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற றஞ்சித பூசணி மகேஸ்வரன், விவேகானந்தன் (லண்டன்), அருளானந்தம் (லண்டன்), பிரேமாவதி (பிரான்ஸ்), யோகானந்தன் (லண்டன்), சந்திரவதனா (கனடா), சுதானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரன், அரியமலர், சாந்தி, கருணாகரன், யசோதரா, மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24 - 9 - 98 இல் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(59418)

## இரத்தினம் செல்லத்துரை

(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் 5/2, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் செல்லத்துரை அவர்கள் 24—09—1998 நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான இரத்தினம் (சாக்கர்) மங்கையர்க்கரசி ஆகியோரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற செல்வரத்தினம் (C. W. E). அரசரெத்தினம் மற்றும் திருமதி து. சரஸ்வதி (இந்தியா), திருமதி த. மகேஸ்வரி (லண்டன்), இ. செல்வநாயகம், திருமதி ச. விமலாதேவி, திருமதி த. மனோகரி ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற செ. லைலாகுமார், செ. இராஜேஸ்வரன், செ. பரமேஸ்வரன் மற்றும் திருமதி ஸ்ரீ லைலாகுமாரி, செல்வி. வசந்தா, செல்வி. செ. சிவமலர், திருமதி ச. செல்வகுமாரி ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-09-98) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. சந்திரமோகன்
(மருமகன்)

5/2, வைமன் வீதி,
நல்லூர்.

(59416)

செல்வன்

## செல்வராசா தர்மேஷ்

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் செல்வராசா தர்மேஷ் 22. 09. 1998 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் செல்வராசா-செல்வராணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், செல்வகலா, கவிதா, மாலவன், வித்தகன், தர்ஷிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கமுத்து, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, முத்துக்குமாரு, செல்லம்மா ஆகியோரின் அன்புப்பேரனும், மருதலிங்கம், சுப்பிரமணியம் (ஜேர்மனி), புண்ணியமூர்த்தி ஆகியோரின் பெறாமகனும், தர்மலிங்கம், சிவனேசன் (ஜேர்மனி), மகேந்திரன ஆகியோரின் மருமகனும், யோகம்மா, மகேஸ்வரி, சிரோன்மணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25. 09. 98 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மருதலிங்கம்
(மருதம் உணவகம்)

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(59403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியேற்பதற்கு சிறிது முன்னதாக ஹுன்சென் மீது கொலை முயற்சி!

## வாகன அணி மீது றொக்கற் வீச்சு

நொம்பென், செப். 25

**கம்போடியாவில் நேற்று புதிய அரசு பதவியேற்க இருந்த சமயம் பிரதமர் ஹுன்சென் படுகொலை முயற்சியில் இருந்து உயிர்தப்பினார்.**

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தமது கட்சி உறுப்பினர்கள் சகிதம் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்த சமயம் அவரது வாகனம் மீது றொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் ஹுன்சென் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். இச் சம்பவத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். சிவிலியன்கள் சிலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹுன்செனைப் படுகொலை செய்வதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் இது என்று அவரது மக்கள் கட்சியினர் தெரிவித்தனர். தாக்குதல் இடம்பெற்ற போதும் புதிய அரசு பதவியேற்பு வைபவம் திட்டமிட்டபடி நடைபெற்றது.

(ஐ)

## முன்னாள் பிரதமர்களின் பொருள்கள் ஏலத்தில்

புதுடில்லி, செப். 25

இந்தியாவின் முன்னாள் பிரதமர்களாக இருந்த இந்திரா காந்தி, அவரது மகன் ராஜீவ்காந்தி ராஜீவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பீ.வி. நரசிம்மராவ் ஆகியோருக்கு அன்பளிப்பாகக் கிடைத்த கலைப் பொக்கிஷங்களை இந்திய காங்கிரஸ் கட்சி நேற்று ஏலத்தில் விற்பனைக்கு விட்டது.

கீதை உபதேசத்தை விளக்கும் வெள்ளி ரதம் மற்றும் சந்தன மரத்தினாலான பொருள்கள் உட்பட நூற்றி இருபது கலைப் பொக்கிஷங்கள் விற்பனைக்கு விடப்பட்டதாக காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-ரீ)

## தடைகளை நீக்கும்

பாகிஸ்தான் அணுஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட விருப்பம் தெரிவிக்குமேயானால் ஜப்பான் பாகிஸ்தான் மீதான பொருளாதாரத் தடைகளை அகற்றும் என ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தற்போது நிறுத்தி வைத்துள்ள பாகிஸ்தானுக்கான கடன்களை வழங்க முன்வரும் என்பதுடன் ஏனைய நாடுகளையும் பாகிஸ்தானுக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும் என குரல் கொடுக்கும் என்றும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரீ)

## அமெரிக்காவில் கறுப்பர்கள் மீது தொடர்ந்தும் இனப்பாகுபாடு!

### ஆணைக்குழு அறிக்கையில் தகவல்

வாஷிங்டன், செப். 25

அமெரிக்காவில் சிறுபான்மையினரான கறுப்பர்களுக்கு எதிரான இனப்பாகுபாட்டை வெள்ளையர்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

இனப்பாகுபாடு குறித்து ஆராய்ந்த ஆணைக்குழு மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டி உள்ளது.

அமெரிக்காவில் இனப்பாகுபாடு மற்றும் அவர்களது சமூக பொருளாதார நிலை குறித்து அதிபர் கிளின்ரனுக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு தனது அறிக்கையை அண்மையில் கிளின்ரனிடம் சமர்ப்பித்தது.

ஹொட்டேல்களில் வெள்ளையர்களுக்கே சிறப்பான சேவை அளிக்கப்படுகிறது. வாகனங்கள் வாங்கும்போது அவை வெள்ளையர்களுக்கே நியாயமான விலையில் விற்கப்படுகின்றன.

வெள்ளை இன அமெரிக்கர்கள் மற்றும் அவர்களது சந்ததியினரால் கறுப்பு இனத்தவர்கள் தொடர்ந்தும் வஞ்சிக்கப்பட்டே வருகின்றனர் — என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

(ஐ)

## தென்னாபிரிக்கப் படைகளுக்கு லெசத்தோவில் கடும் எதிர்ப்பு!

ஜோஹனர்ஸ்பேர்க், செப். 25

லெசத்தோவில் கிளர்ச்சியை அடக்குவதில் ஈடுபட்டுள்ள ஆபிரிக்கப்படையினர் அங்கு கடும் எதிர்ப்பைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று தென்னாபிரிக்கப் படைகள் லெசத்தோவிற்குள் புகுந்தன. அடுத்த 24 மணி நேரத்தில் இரு தரப்பிலுமாக 49 பேர் பலியானதாக தென்னாபிரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக அங்குள்ள படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். லெசத்தோவில் இராணுவ ரீதியாக தென்னாபிரிக்கா தலையிட்டிருப்பது சில தரப்புகளினால் கண்டிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க தேசிய பாதுகாப்புப் படைகள் (எஸ். என். டி. எவ்) என்ற பெயரில் தென்னாபிரிக்கப் படைகள் லெசத்தோவில் நிலை கொண்டுள்ளன.

தென்னாபிரிக்காவில் இனப்பாகுபாடு முடிவுக்கு வந்து முதலாவது கறுப்பின அதிபராக நெல்சன் மண்டேலா மீண்டும் பதவிக்கு வந்த பின்னர் வெளிநாட்டு விவகாரம் ஒன்றில் தென்னாபிரிக்கப் படைகள் இழப்புக்களைச் சந்தித்திருப்பது இதுவே முதன்முறை ஆகும்.

லெசத்தோவில் பிரதமர் பகாலிதா மொசிசிலியின் அரசை அதிருப்திப் படையினரிடம் இருந்து பாதுகாப்பதற்காக தென்னாபிரிக்கா இந்த இராணுவத் தலையீட்டில் இறங்கியுள்ளது.

(ஐ)


### மது கல்வி நிறுவன வாணி விழா

நாள்: 27 09-98 ஞாயிற்றுக்கிழமை
இடம்: மது கல்வி நிறுவனம்

1. ஆரம்பப் பிரிவு நிகழ்வுகள்:
   காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை
2. இடைநிலைப்பிரிவு நிகழ்வுகள்:
   பகல் 1 மணி முதல், 3 மணி வரை
3. பரிசளிப்பு வைபவம்:
   பிற்பகல் 3 மணி முதல்4 மணிவரை
   (க. பொ. த. சாதாரண பரீட்சையில் அதி உயர் சித்திபெற்ற மது கல்வி நிறுவன 40 மாணவர்களுக்கு வழங்கப்படும். )
4. சிறப்பு நிகழ்வு:
   பி. ப. 4 மணி முதல் 5 மணிவரை

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளையின்
'பாஞ்சாலி சபதம்'
ஆட்டக் கூத்து

அனைவரையும் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் தெற்கு, இயக்குநர்
கோப்பாய். மது கல்வி நிறுவனம்

(59410)



### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் நலன் விரும்பி
பட்டயக் கணக்காளர்

திருவாளர் அ. சோமசுந்தரம்பிள்ளை
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி வள்ளியம்மை அருணாசலம்**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு ஆறாத்துயர் கொள்ளும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி.

(சி/4978)


## கரீபியன் தீவுகளில் சூறாவளி

சன்டோ டொமினிக்கோ, செப். 25

கரீபியன் தீவுகளை கடும் சூறாவளி தாக்கியதில் நூற்றுக்குமேற்பட்டோர் பலியாகி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அமெரிக்காவின் தென் புளோரிடா மாநிலத்தையும் சூறாவளி தாக்கியுள்ளது.

டொமினிக்கன் குடியரசில் பலத்த சேதங்கள்

**உலக அரங்கில்**

## கிளின்ரனுக்கு மக்கள் ஆதரவு தொடர்கிறது

வாஷிங்டன், செப். 25

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் அளித்த சாட்சியங்களைப் பதிவு செய்த வீடியோ மற்றும் ஆவணங்கள் வெளியிடப்பட்ட பின்னரும் அதிபர் கிளின்ரனுக்கு மக்கள் ஆதரவு தொடர்வதாக கருத்துக் கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

சீ.என்.என். தொலைக் காட்சியின் 'யு.எஸ்.ருடே' நிகழ்ச்சி நடத்திய இந்தக் கருத்துக் கணிப்பில் 66 சதவீதமானோர் கிளின்ரன் பதவிவிலகத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளனர்.

அதிபர் கிளின்ரனுக்கு உலகம் முழுவதுமே ஆதரவளிப்பதால் அவர் பதவி விலக வேண்டிய அவசியமில்லை என்று தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார். கிளின்ரனுக்கு ஆதரவு தெரிவித்து சுமார் 60 உலகப்பிரமுகர்கள் மனு ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

(ஐ)


ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தால்
(G T Z) புனரமைப்புச் செய்யப்பட்ட
யா/கோப்பாய் மகாவித்தியாலய

### கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

காலம்: 27 - 09 - 1998 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30 மணி

தலைவர்: திருமதி செ. நவரத்தினம்
(அதிபர்)

பிரதம விருந்தினர்கள்;

திரு. ஸ்ரீபன் R. வேர்த்
(ஆலோசக இணைப்பாளர் GTZ)

திரு. புருணோ P. வெம்ஸ்லர்
(கட்டடக் கலைஞரும், ஆலோசகரும் G T Z)

சிறப்பு விருந்தினர்கள்:

திரு. ஆ. இராஜேந்திரன்
(கோட்டக் கல்வி அதிகாரி, கோப்பாய்)

திரு. ஜி. சிவபாலன்
(பிரதம பொறியியலாளர், கல்வித் திணைக்களம்)

வைத்திய கலாநிதி வை. தியாகராஜா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(59409)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பனைச்சந்தைகளும், பிரதான கண்டிவீதிக்கும் வடக்குப் பக்கமாக பெரிய கடை ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு. அரியநாயகம், சட்டத்தரணி, 71/5, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம், (59395)

### தவறிவிட்டது

அம்பிகாவலன் கௌரி என்பவரது தேசிய அடையாள அட்டை (528363808 V), விசேட அடையாள அட்டையும் கடந்த 6-9-98 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் அம்பிகாவலன் கௌரி, ஸ்ரேசன் றோட், சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (59401)

பெரியதோட்டம், புத்தூர் விலாசமுள்ள கந்தையா குமாரசாமி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல 231871160 V) யாழ். நகரில் 21-9-98 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து Dr. மகேசன், அவசர சிகிச்சைப் பிரிவு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கொடுத்துதவவும். (59402)

22-9-98 இல் எனது கடவுச்சீட்டும், மொனரா விமான ரிக்கட்டும் பலாலிக்கும், யாழ். பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சு. கணேசமூர்த்தி, ஜி. பி. எஸ். றோட், கல்வியங்காடு. (59397)

துரைராஜா விநோதன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை 21-09-98 அன்று மானிப்பாய் வீதியில் தவறி விட்டது. (இல. 091031014) கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மருதலிங்கம் ஸ்ரோர்ஸ், மானிப்பாய் சந்தியில் ஒப்படைத்து உதவவும். (59388)

### உதவியாளர் தேவை

றபர்சீல் தயாரிக்க ஆண் உதவியாளர் தேவை. பிறந்த திகதியுடன் விண்ணப்பிக்கவும். 91/1, மின்சார நிலைய வீதி (மேல் மாடி), யாழ்ப்பாணம். (59351)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி (28 வயது) ஆசிரியருக்கு 7 இல் செவ்வாய் உள்ள இந்து மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். சாதகம், குறிப்பு, புகைப்படம் போன்ற சகல விவரங்களோடு கடிதம் மூலம் உடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை புகைப்படத்துடன் திருப்பி அனுப்பப்படும். தொடர்புக்கு: திருமதி N. சிவயோகசுந்தரம் 219/3, கடையிற்சாமி லேன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-4971)

### தொடர்புகொள்ளவும்

தாவளையடியில் இருந்து 23-9-98 புதன் காலை 7 30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிவந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்ஸில் (C. T. B) ஒருதங்க மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரங் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: பெ. செபஸ்ரியாம் பிள்ளை கடை உரிமையாளர், தாவளையடி. (59389)

## சங்கானை கிராமிய வங்கியில்
# 5,000 ரூபா கொடுப்பனவு இன்று முதல் பெறலாம்

வலிகாமம் மேற்கு, செப். 25

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சங்கானை கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவை வழங்குவதற்கு சங்கானை ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை பண்ணாகம் கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும்—

எதிர்வரும் திங்கட்கிழமை பனிப்புலம், வட்டு. வடக்கு ஆகிய இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும், —

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை சித்தன்கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் —

எதிர்வரும் வியாழன் சங்கானை மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும்—

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு வங்கிக்கு வருகின்ற குடும்பத்தலைவர்கள் இரண்டு ரூபா முத்திரை, தேசிய அடையாள அட்டை, 15 ரூபா பணம் ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் பொது முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மீளக் குடியமர்வுக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் கிராமிய வங்கியின் சேவைக் கட்டணமாக 15 ரூபா அறவிடப்படுகின்றது. (ஐ-175)


வலி கிழக்கு (தென்பகுதி)

**பல நோ. கூ. சங்கம்**

**வெதுப்பகம் குத்தகைக்கு வழங்கல்**

ஷ சங்கத்தினால் நடத்தப்படும் வெதுப்பகம் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. முற்பணம் ரூபா 25,000 செலுத்த வேண்டும். குத்தகைக்கான கேள்விக் கோரிக்கை ஏற்கப்படும் கடைசித்திகதி 30 - 09 - 98 ஆகும். மேலதிக விவரங்களுக்கு சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

பொது முகாமையாளர்

நீர்வேலி.
1998 – 09 – 24 (சி/4977)



**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**

புதிய அனுமதி பெற்ற மாணவர்களுக்கு பாடநெறி. பயண ஒழுங்கு சம்பந்தமான விசேட கலந்துரையாடல்.

இடம்: உயர் தொழில் நுட்ப நிறுவனம் (A. T. I) திருநெல்வேலி


காலம்: 28 - 09 - 1998 திங்கட்கிழமை காலை 9-30மணி

சிரேஷ்ட மாணவர்கள்,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

(59404)


## இரண்டாம் வருட நினைவலைகள்

மலர்வு 06 — 04 — 1969



உதிர்வு 17 — 09 — 1996

செல்வி
**பரமேஸ்வரி தம்பையா**
(உஷா)
(பொருளியல் சிறப்புக்கலை 4ஆம் வருடம், யா/பல்கலைக்கழகம்)

திதி: 25 — 09 — 1998

ஆண்டு இரண்டு சென்றாலும் ஆறவில்லை நம் துயரம்
அன்ரா, நாம் தங்கள் பாதையில் முன்னேறிட வானிலிருந்து வாழ்த்துங்கள்

அன்ராவின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சாயி துர்க்கை அம்மனை கண்ணீர் மல்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உந்தன் நீங்கா நினைவுடன்:
பெறாமக்கள் ஜெகன் [illegible]

கோணாவளை [illegible]
கொக்குவில். (59400)

## கப்பூதுப் பகுதி மரமொன்றில் வயோதிபரின் அழுகிய சடலம்

நெல்லியடி, செப். 25

செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தத் திருவிழாவிற்குச் செல்வதாகக்கூறி வீட்டை விட்டுச்சென்று 18 நாள்களாக தகவல் தெரியாதிருந்த வயோதிபர் சடலமாக மீட்கப்பட்டார்.

கரவெட்டி கிழக்கு வளர்மதியைச்சேர்ந்த சின்னக்குட்டி வைரவன் (வயது 96) என்ற வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவர் திரும்பிவராமையால் அவரை அவரது பிள்ளைகளும், உறவினரும் தேடி வந்தனர்.

கப்பூதுவிலுள்ள மரம் ஒன்றில் தொங்கிய நிலையில் உருக்குலைந்த சடலமாக அவர் நேற்று முன்தினம் மீட்கப்பட்டார்.

அவரது சடலம் நேற்று முன்தினம் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது மகனிடம் ஒப்படைக்கப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனையை நடத்தினார். பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் விஜயராணி உருத்திரேஸ்வரன் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (ஐ-109-9)

## பேச்சுவார்த்தைக்கு
# மத்தியஸ்தம் வகிக்க சிறிசேன குரே விருப்பம்

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு நான் தயார். அதேவேளை வடக்கே இடம்பெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கு நிபந்தனையுடன் அல்லது நிபந்தனை எதுவுமற்ற நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதே உகந்த வழி.

ஐ. தே. கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சிறிசேனகுரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவதனால் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதே உகந்தது எனக் கருதுகின்றேன். ஐ. தே. கட்சியின் சார்பில் போட்டியிட வேண்டிய அவசியம் இல்லை. ஆயினும் இது தொடர்பாக தீர்க்கமான முடிவை என்னால் தெரிவிக்க முடியவில்லை என்றும் குரே தனது ஆதரவாளர்களிடம் தெரிவித்துள்ளார். (ஐ-6)

## பஸ் தரிப்பு நிலையம்

சங்கரத்தை— வழுக்கையாற்று வீதியில் புதிய பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பஸ் தரிப்பு நிலையங்களுக்கான தரிப்பு கட்டை குறியீடுகளும் அவ்விடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. (ஐ-185)

## அனல் நிலை அமையாவிடின்
# தினமும் 3 மணிநேர மின்வெட்டு வரும்?

கற்பிட்டியிலுள்ள நுரைச்சோலையில் உத்தேச அனல் மின் நிலையம் அமைக்கப்படாவிடின் 2004 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நாளொன்றுக்கு 3 மணிநேர மின்வெட்டை அமுல் படுத்த நேரிடும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் அர்ஜான தரணியகல தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 10 இலட்சத்து ஆயிரத்துத் 900 அலகு மின்சாரம் தேவைப்படும் எனவும் இதில் 25 சதவீத மின்சாரத்தை உத்தேச கற்பிட்டி அனல் மின் நிலையத்தால் உற்பத்திசெய்ய முடியும் எனவும் தரணியகல தெரிவித்துள்ளார் என 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)


ஓம்

**வண்ணை**

**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**

யாழ்ப்பாணம்

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

22 - 09 - 98 — 07 - 10 - 98

22-09-98 செவ்வாய்க்கிழமை கொடியேற்றம்
26-09-98 சனிக்கிழமை புரட்டாதி சனிவார உற்சவமும்
இரவு பூந்தண்டிகை உற்சவமும்
28-09-98 திங்கட்கிழமை இரவு வெண்ணைத்தாளிச்சேவை சப்பறம்
பி.பகல் 4-30 மணி வசந்த மண்டபப்பூஜை
30-09-98 புதன்கிழமை பகல் 10 மணி இரதோற்சவம்
01-10-98 வியாழக்கிழமை பகல் 10 மணி தீர்த்தோற்சவம்
02-10-98 வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணி திருக்கல்யாண உற்சவம்
05-10-98 திங்கட்கிழமை பி. ப. 3 மணி சுமங்கலி தீப பூஜையும் உற்சவமும்.

மாலைத் திருவிழாக்கள் பி. ப. 4-30 மணி வசந்த மண்டபப் பூஜை நடைபெறும்.

– தேவஸ்தான மகாசபை

(சி/4976)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் சேவை நூலகம்

### இனப்பிரச்சினைத் தீர்வுக்கான

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை பகிஷ்கரிக்க ஐ. தே. க. முஸ்தீபு

கொழும்பு, செப். 25
ஐ. தே. க. கூட்டிய சர்வ கட்சி மாநாட்டை நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கேலி செய்துள்ளதால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை பகிஷ்கரிக்கவிருப்பதாக ஐ. தே. க. பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மகாசங்கத்தினரிடமும், தமிழ்க் கட்சிகளிடமும் அமைச்சர் பீரிஸ் எமது கட்சி கூட்டிய சர்வகட்சி மாநாட்டுக்கு எதிராகக் கருத்து வெளியிட்டுள்ளார் என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

(இ-3-10)

## ஆரியகுளம் சந்தியில் புதிய பாதுகாப்பு அரண்

யாழ்ப்பாணம், செப். 25
யாழ். ஸ்ரான்லி வீதி ஆரியகுளம் சந்தியில் புதிய பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியூடாக வாகனங்கள் உள்ளே செல்ல அண்மைக் காலமாக தடைவிதிக்கப்பட்டிருந்தது. வெலிங்டன் தியேட்டர் சந்தியிலிருந்து பெருமாள் கோயிலுக்குச் செல்லும் வீதியும் தற்பொழுது போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

நகரின் முக்கிய சந்திகள், பிரதான வீதிகளில் நேற்று முன்தினம் மேலதிக படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

(ஐ-5)

## அம்பாறையில் 8 ஆவது இளைஞர்பல்கலைக்கழகம்

கொழும்பு, செப். 25
அம்பாறை மாவட்டத்தில் 8 ஆவது இளைஞர் பல்கலைக்கழகம் அமைக்கப்படவுள்ளது.

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்களுக்காக இந்தப் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பட்டப்படிப்பை நடத்தும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் கூட்டாக இந்தத் திட்டத்தை அமுல்படுத்தியுள்ளன.

அம்பாறை நகர மண்டபத்தில் இந்த 8 ஆவது இளைஞர் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

வர்த்தக நிர்வாகம், வர்த்தக முகாமைத்துவம், பொருளியல், புவியியல், வர்த்தக கணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாட நெறிகள் நடத்தப்படுகின்றன.

இந்தப் பல்கலைக்கழகம் பரீட்சைகளை நடத்துவதுடன் விரிவுரைகளை ஏற்பாடு செய்து மீட்டல் வகுப்புக்களையும் நடத்தும்.

(ஐ-6)

### வினாத்தாள் "அவுட்"

## இரு பாடப் பரீட்சைகளை ரத்துச் செய்ய முடிவு?

கொழும்பு, செப். 25
கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்றில் இரு பாடங்களின் பரீட்சைகளை ரத்துச் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சைக்கு முன்பாக இரு பாடங்களின் வினாத்தாள்கள் வெளியான விவகாரம் தொடர்பாக அங்கு பெரும் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

பரீட்சைக்கு முன்பாக வெளியான பாடங்களின் பரீட்சைகளுக்குப் பதிலாக அங்கு விசேட பரீட்சை ஒன்றை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும்—

அது தொடர்பாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் இன்று நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடுவார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

(இ-3-10)

## பாதுகாவலர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 25
யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணிக்கு கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கப் பணிமனையில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

## நகைக்கடை விவரம் சேகரிப்பு

வலி. மேற்கு, செப். 25
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் நகைக்கடைகளின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுமுள்ள நகைக்கடைகளின் விவரங்களை அவ்வப் பகுதிக் கிராம உத்தியோகத்தர்கள் திரட்டுகின்றனர்.

(ஐ-175)

## செயலக உள்ளகத் தொலைபேசி ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், செப். 25
யாழ். செயலக உள்ளக தொலைபேசிகள் கடந்த ஒரு வாரமாக செயலிழந்துள்ளன. தொலைபேசிக் கம்பிகளை எலிகள் வெட்டியதனாலே அவை செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள நிறுவனம் ஒன்றினால் இணைக்கப்பட்ட இந்த உள்ளக தொலைபேசியை மீண்டும் இயங்கச் செய்வதற்கு குறிப்பிடப்பட்ட நிறுவன ஊழியர்கள் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ளனர்.

(ஐ-5-7)

## மன்னாருக்கு புதிய பொலீஸ் அத்தியட்சகர்

கொழும்பு, செப். 25
பொலீஸ் அத்தியட்சகர் லலித் லேகம்கே மன்னாருக்கான புதிய பொலீஸ் அத்தியட்சகராக கடந்த 22 ஆம் திகதியில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலீஸ் தலைமையகத்தின் விநியோகப் பிரிவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பெருமளவிலான ஊழல்கள் மோசடிகளை பொலீஸ் அத்தியட்சகர் லலித் லேகம்கேயே கண்டுபிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 06 — 04 — 1969

உதிர்வு 17 — 09 — 1996

செல்வி
**பரமேஸ்வரி தர்மையா**
(உஷா)
(பொருளியல் சிறப்புக்கலை 4 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்)

உன்மலர்ந்த முகமும் முத்தான சிரிப்பும்
களங்கமில்லா உள்ளத்தின் கனிவான பேச்சும்
கேளாது மனம் வேகுதம்மா உஷா...!

தாய், சகோதரி, மைத்துனர், பெறாமக்கள், உறவினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(59390)


## மெய்வல்லுநர் போட்டி

நவாலி சென். பீற்றேர்ஸ் றோ. க. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2. மணிக்கு அதிபர் சிறில் சுகந்தரன் தலைமையில் சென். பீற்றேர்ஸ் ஆலய முன்றலில் இடம் பெறும்.

இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதனும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் சி. செல்லையாவும், கௌரவ விருந்தினராக நவாலி பங்குத் தந்தை அருள்திரு. ஓ. பி. அன்ரனிப்பிள்ளை அடிகளும் நவாலி கிழக்கு கிராமசேவையாளர் ந. பற்குணராசாவும் கலந்து கொள்வார்கள்.

## வாசகர் திருமுகம்

### சிப்பி அரிக்கும் தொழிலால் விவசாய நிலங்களுக்கு பாதிப்பில்லை

இம்மாதம் 8 ஆம் திகதிய ''உதயன்'' பத்திரிகையின் வாசகர் திருமுகத்தில் 'மண் அள்ளுவதைத் தடுக்குக' என்ற தலைப்பின் கீழ் வெளியான விடயம் தொடர்பாக இதை எழுதுகின்றேன்.

ஆனைக்கோட்டை கல்லுண்டாய்ப் பகுதியில் 15 வருட காலமாக சிப்பி அரிக்கப்பட்டு வருவதைப் பலரும் அறிவார்கள். இத்தொழிலை மிகவும் வறுமை நிலையிலுள்ள மக்களே மேற்கொள்கிறார்கள். இத்தொழிலை நம்பியே இப்பகுதி மக்கள் பலர் உயிர் வாழ்கின்றனர்.

சிப்பி அரிக்கும் தொழில் தடுக்கப்பட்டால் இத்தொழிலை மேற்கொள்ளும் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கவேண்டி ஏற்படும். சிப்பி அரிப்பால் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படும் சாத்தியம் மிகமிகக் குறைவானது. மண் அள்ளுவதன் மூலமே பாதிப்புக்கள் அதிகளவு ஏற்பட வாய்ப்புண்டு.

மண் அள்ளுபவர்களுக்கும் சிப்பி அரிப்பவர்களுக்கான எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதனை இப்பகுதிக் கமக்காரர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

மண் அள்ளுவதைத் தடுப்பதற்காக கமக்காரர்கள் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் சிப்பி அரிக்கும் மக்களாகிய நாம் எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

எம். வசந்தன்
(சிப்பி அரிக்கும் மக்கள் சார்பாக)
ஆனைக்கோட்டை.

### பரீட்சைப் பெறுபேறுகளின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

ஒரு நாட்டில் நடைபெறும் பரீட்சைகளும் அதன் பெறுபேறுகளும் மனிதனுடைய வாழ்க்கையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இலங்கையில் 1995 ஆம் ஆண்டு அதிபர் தரத்திற்கான பரீட்சைக்கும், இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும், கல்விசார் உத்தியோகத்தர்களும் விண்ணப்பித்தார்கள். இதுவரை அதிபர் தரத்திற்கான பரீட்சை நடைபெறவில்லை. பரீட்சைக் கட்டணம் பரீட்சார்த்திகளுக்கு திரும்ப வழங்கப்படவும் இல்லை.

இலங்கை கல்வி நிர்வாக சேவை (எஸ். எல். ஈ. எஸ்.) பரீட்சை 1995 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் கொழும்பில் நடைபெற்றது. யாழ். பரீட்சார்த்திகள் பலர் போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியில் பரீட்சைக்குத்தோற்றினர். இப் பரீட்சைப் பெறுபேறுகளும் இதுவரை வெளிவரவில்லை, அண்மையில் யாழ். வருகை தந்த வடக்கு—கிழக்கு கல்வி விளையாட்டுத் துறைச் செயலாளர் இப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரமாட்டாதென அறிவித்தார். நன்றிகள், இனியும் தொடர்ந்து எதிர்பார்த்து ஏமாறத் தேவையில்லை

இலங்கையில் முதன்முதல் தமிழ்மொழி மூலம் இலங்கை அமைச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினால் உத்தியோகத்தர்கள் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை 1997 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் ஒரு பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டது. இவ்விரண்டு நிகழ்விற்கும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியினதும், யாழ். மாவட்ட அமைச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினதும் மற்றும்சில அதிகாரிகளினதும் செயற்பாடுகள் அளப்பரியன. யாழ் மாவட்ட பரீட்சார்த்திகள் சித்தியடைவதற்கு உதவிய யா/மா/அ/மெ. சங்கத்தினதும் சேவை தன்னலமற்ற பணியாகும்.

பரீட்சை நடைபெற்று பெறுபேறுகள் ஒரு மாதத்திற்குள் வெளியாகியமை போற்றுதற்குரியது. யாழ்ப்பாணப் பரீட்சார்த்திகளுக்கு அவர்களுடைய பெறுபேறுகளை யா/மா/அ/மெ. சங்கத்தினர் பெற்று வழங்குவதாக உதயன் பத்திரிகை ஊடாக அறிந்தோம். இப்பரீட்சையில் சித்தியடையாத தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களில் பல குளறுபடிகள் நடைபெற்றதாகக் கருதி சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகளை இதுவரை சங்கம் பொறுப்பேற்கவில்லை, யா/மா/அ/மெ சங்கத்தினர் இதன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு ஒரு முடிவை அறிவிக்க வேண்டும். தொடர்ந்தும் ஏமாற்றத்திற்கு இடமளிக்காது முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

க. கோவிந்தராசா
கண்டி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறவழி
## தையல், பனங்கைப்பணிக் கண்காட்சி

நாள்: 26 - 09 - 98 சனிக்கிழமை
இடம்: அறவழிச் செயலகம்
நேரம்: காலை 9 மணி

தலைவர்:
திரு. வீ. ஜீ. தங்கவேல்
(தலைவர், அறவழி)

பிரதம விருந்தினர்:
திரு. எம். எஸ். சரவணபவ
(செயலாளர், நகரசபை)

சிறப்பு விருந்தினர்:
திரு. எஸ். கோகுலதாசன்
(பொது முகாமையாளர், ப. அ. ச.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறவழிப் போராட்டக்குழு

NVDAG,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (59392)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 — 07 — 1928



விண்ணில் 25 — 09 — 1996

அமரர்
## யேசுசகாயம் அல்பிரட் அருளானந்தம்

(ஓய்வு பெற்ற அத்தியட்சகர், தபால் திணைக்களம்)
"தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார்" — வெளி. 22: 5

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர், சகோதரிகள்.

"பிளசரின்"
நவாலி தெற்கு. (59375)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கார்த்திகேசு சிவபாலசிங்கம்

[பிரதிப் பதிவாளர், யாழ். உயர்நீதிமன்றம்]

தோற்றம் 20 — 04 — 1941
மறைவு 06 — 10 — 1997

அன்புள்ள அப்பாவே!
ஆண்டொன்று போனாலும்
ஆறுமோ எமது உள்ளம்?

மனைவி, பிள்ளைகள்.

மானிப்பாய் வீதி,
இணுவில் மேற்கு. (59378)

## வயோதிபரின் சடலம் மீட்பு

வடமராட்சி, செப். 25

உடுப்பிட்டியிலுள்ள வல்லை வீதியில் சேதமடைந்த வீடுகளுக்கு அண்மையில் இனந் தெரியாத வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச் சடலத்தின் அருகில் நஞ்சுப்போத்தல் ஒன்றும் 'வடிவேலு வேலாயுதம்' என்ற பெயரில் தேசிய அடையாள அட்டை ஒன்றும் இருக்கக் காணப்பட்டது.

உடுப்பிட்டி கிராமசேவையாளர் வி. பாலசிங்கத்தின் ஏற்பாட்டில் சடலம் அடையாளம் காண்பதற்காகவும், பிரேதபரிசோதனைக்காகவும் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பருத்தித்துறைப் பதில்நீதிவான் ஏ. கே. நடராசா மரண விசாரணை நடத்தினார். வல்வெட்டித்துறைப் பொலீஸார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். விசாரணையின் போது பிரேத பரிசோதனை செய்த வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் சாட்சியமளிக்கையில் நச்சுத் திராவகம் அருந்தியதால் இம் மரணம் ஏற்பட்டது எனத் தெரிவித்தார். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. சடலத்தை எவரும் அடையாளங் காட்டாமையினால் அரச செலவில் அடக்கஞ் செய்யப்பட்டது. (ஐ-173-109-139)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 25

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைப் பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

உடுவில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், உடுவில் பிரதேசச் செயலர் ஆ. மகாலிங்கமும், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க. தேவராசாவும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-ரீ)

## சிறுவர் தின போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 25

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்கள் நடத்தும் கட்டுரை, கவிதைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்காக விண்ணப்பித்த அனைத்து போட்டியாளர்களையும் அன்றைய தினம் கல்லூரிக்கு அனுப்பி வைக்குமாறு வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் அதிபர்களைக் கேட்டுள்ளார். [ஐ - 9]


வாங்கிவிட்டீர்களா?

அறிவுக் களஞ்சியம்
36

இப்பொழுது விற்பனையாகிறது!
(59367)



## கூறுவிலை கோரல்

கீழ்க்குறிப்பிட்ட பொருள்கள் விற்பனைக்குண்டு.

1. வெள்ளை பொலியஸ்டர் காற்சட்டைத்துணி — 475 . 33 மீற்றர்
2. அரிக்கன் லாம்பு - 45

பொருள்களைப் பார்வையிட்டு கூறுவிலை சமர்ப்பிக்கலாம்.

'பேரூட்'
(யாழ். மேற்கு) டச்சு வீதி,
சித்தன்கேணி. (59384)



## பயிலுநர்கள் தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றில் போட்டோ பிரதி இயந்திரம், தட்டச்சு, றோணியோ இயந்திரங்கள் திருத்துவதிலும், சேர்விஸ் செய்வதிலும் பயிற்சிபெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில்நுட்பத் துறையில் ஆர்வமுடையவர்கள் அத்தாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர்:
இல. 789, மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4954)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
## லோகநாயகி தயாபரன்

ஜனனம் 14-10-1949
மரணம் 26-08-1998

தீதி: 25 - 09 - 1998

திருவிளக்கே நாயகியே
தூண்டாமணி விளக்கே சுடரே
தெருவோரம் நீ அணைந்ததேன்?
பிணியோடு பணி செய்த உந்தனுக்கு
கருவினிலே இதுதான் விதியென்று
இறைவன் எழுதியா வைத்தான் அன்று.
வருவோர்க்கு பதில் சொல்ல முன்னே
உள்ளம் மௌனமாகிவிட்டது.
உருண்டோடிய எமது வாழ்க்கை
பஞ்சாகி நெஞ்சில் இருளானது.
மருண்டுபோன எமதுறவில்
உன் நினைவே என்றும் ஒளி வீசும்.

கடந்த 26—08—1998 இல் இறையடி சேர்ந்த எமது குடும்ப ஒளி விளக்கு திருமதி லோகநாயகி தயாபரன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் துயரச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி, கடிதம், தந்தி மூலமும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்ட அன்புள்ளங்களுக்கும் ஆத்ம சாந்தி நடைபெறும் இந்நாளில் கலந்து பிரார்த்தனை செய்தவர்களுக்கும் நினைவுநூலை மிக விரைவில் அச்சிட்டுத் தந்த லக்ஷ்மி (கொழும்பு - 13) அச்சகத்தாருக்கும் இன்னும் பல வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
உறவினர்கள்

12/4, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (59383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஓயாது இந்தச் சூது!

எனது நாட்டில் இன ரீதியான மனக்குறைகள் இல்லை என்று நாங்கள் கூறவில்லை; இருக்கின்றன என்றே நம்புகிறோம். அதற்காகவே அரசியல் கலந்துரையாடல்கள், சமரசப் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண முயல்கிறோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் 53 ஆவது பொதுச்சபையில் நிகழ்த்திய உரையின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

இந்த வாசகத்தைப்படிக்கும்போது தமிழ் மக்களுக்கு மனக்குறைகள் இருக்கின்றன; அவர்களது உரிமைகள் வழங்கப்படவில்லை என்பதில் நாட்டின் தலைவரது மனதில் ஒரு சந்தேகம் இருப்பதாகவே வெளியார் எவரும் புரிந்து கொள்வர்.

தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உண்டு; அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நாட்டின் ஏனைய தலைவர்கள் முயற்சி செய்வதை விட நான் அதிதீவிரமாகச் செயற்படுகிறேன் என்று கூறியிருக்க வேண்டிய ஜனாதிபதி —

ஏன் முன்கண்டவாறு சந்தேக நிலையில் நின்று— திட்டவட்டமாகத் தெரிவிக்காமல் — தளம்பிக் கூறினார் என்று தமிழ் மக்கள் கவலைப்படுகிறார்கள்; அதிருப்தி தெரிவிக்கிறார்கள்.

சமரசப் பேச்சு மூலம் தமிழர்களின் மனக்குறைகளைத் தீர்க்கும் முயற்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே குந்தகமாக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்த ஜனாதிபதி —

அவர்கள் கூட, தமது தனிநாட்டுக் கோரிக்கையையும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் கைவிட்டுவிட்டு சமரசப் பேச்சுக்கு வரலாம் — எனவும் சொல்லியுள்ளார்.

நியுயோர்க்கில் நின்று ஜனாதிபதி இவ்வாறெல்லாம் ஒலித்த அதே நாளில், கொழும்பில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு குழுவினர் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை இல்லாமலும் சரி, நிபந்தனையுடனும் சரி பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்று எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினர் பிரஸ்தாப ஊர்வலத்துக்குத் தலைமை வகித்தவர்கள் இரண்டு பௌத்த பிக்குகள்.

நியுயோர்க் பேச்சும், கொழும்பு ஊர்வலமும் ஒரு முடிவையே தெரிவிக்கின்றன அதாவது இந்த நூற்றாண்டு கழிந்தும் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்று கிடைக்கும் சாத்தியம் இல்லை என்பதே அந்த முடிவு!

இனப்பிரச்சினையை அரசியல் முதலீடாக வைத்து அரசியல் சூதாடும் தெற்கின் அரசியல் கலாசாரம் அழியவிடாது காக்கப்படும் என்பதுமாகும்.

இதனால் பாதிக்கப்படுபவர்கள்; பாதிக்கப்படஉள்ளார்கள் தமிழர்களோடு அவ்வப்போது பதவிக்கு வரும் அரசுகளோடு ஒட்டி உறவாடும் தமிழ்த் தலைவர்கள் இனியாவது கண் விழிப்பார்களா?

தமிழ் மக்கள் இப்போது சிக்கியுள்ள பெரும் சுழிக்குள்ளிருந்து மீட்பதற்கு இனியாவது சற்று அரசியல் விவேகத்தோடும், சாணக்கியத்தோடும், பொது நலத்தோடும் பணியாற்றமுன் வருவார்களாக.

# பாரெல்லாம் பரந்து விளங்கி அருள்தரும் அன்னைபராசக்தி

இமயமலை போன்ற சனாதன தர்மத்தில் இருந்து பல திசைகளில் பாய்ந்தோடும் நதிகள் தான் ஷண் மதங்கள் ஆகும். அதில் சாக்த மதமும் ஒன்றாகும். இதன் முழுமுதல் தெய்வம் அன்னை பராசக்தி. சைவம், வைஷ்ணவம் போன்று சாக்தமும் பழமை வாய்ந்ததாகும். சிந்துவெளி நாகரிக காலம் வேதகாலம் ஆகிய காலப் பகுதிகளில் கூட சக்தி வழிபாடு நிலவியுள்ளமைக்கு புதை பொருள்கள் ஆதாரமாக உள்ளன.

நதிகளின் சங்கமஸ்தானம் சமுத்திரமாகும். அதே போல் மதங்களின் சங்கமஸ்தானம் சாக்தமதம் ஆகும் என அவதார புருஷரான ஸ்ரீராம கிருஷ்ணர் அம்பிகையின் மதத்தைச் சித்திரிக்கின்றார்.

இன்று சாக்தர்களால் மட்டுமன்றி அனைவராலும் போற்றப்படும் அம்பிகையானவள் அனைவருக்கும் தன் கருணை மழையைப் பொழிந்து வருவதற்காக ஓர் இடத்தில் இல்லாமல் உலகெங்கும் பரந்து பல நாமங்களுடன் பல வடிவங்களில் காட்சி தந்து அருள்பாலிக்கின்றாள். தாய் தன் குழந்தை எக்குற்றம் செய்தாலும் மன்னித்து துன்பமடைய விடாது கருணை பொழியும் உள்ளங் கொண்டவள். அதே போல அம்பிகையானவள் பல ரூபங்களில், பல நாமங்களோடு கூட இருந்து கருணாகடாட்சியாக அடியார்களைக்காத்து அருள்கின்றாள்.

சக்தி எல்லா இடங்களிலும் இருந்து எல்லாவற்றையும் பார்க்கிறாள் என்றும் அவளே கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு இன்பத்தைக் கொடுக்கிறாள் என்றும், துன்பத்தை விலக்கி மோட்சத்தைக் கொடுக்கிறாள் என்றும், கடன் தொல்லைகளிலிருந்து நீக்குபவள் என்றும், செல்வத்தைத் தருபவள் என்றும் அவளே ராத்திரி தேவி என்றும் உஷா தேவி என்றும் அம்பிகையைராத்திரி ஸூத்தம் வர்ணிக்கின்றது.



ஆதியில் தோன்றியவளும் உலகத்தைப் படைத்தவளும் பிரம்மா விஷ்ணு, உருத்திரன் ஆகியோரைத் தோற்றுவித்தவளும் தேவியே ஆகுமென டஹ்வருசோபநிஷத் கூறுகிறது பாவனோபநிஷத் அம்பிகையின் கையிலுள்ள ஆயுதங்களைப் பின்வருமாறு கூறுகின்றது. ஐந்து தன் மாத்திரைகள் ஐந்து புஷ்பபாணங்கள் என்றும், கரும்பு வில் மனம் என்றும் பாசம் ஆசை ஆகிற கயிறு என்றும் அங்குசம், துவேஷம் என்றும் அம்பிகையின் கையில் உள்ள ஆயுதங்களுக்கு விளக்கம் கூறுகின்றது.

அம்பிகை தனதுகரங்களில் பல ஆயுதங்களை வைத்திருந்து எந்தவொருவரும் குற்றம் இளைக்கக் கூடாது என்றும் அவ்வாறு குற்றம் இளைத்தவர்களை தனது ஆயுதங்களால் தண்டிப்பாள் என்றும் மிகையான ஆசை உள்ளவர்களை தனது பாசக் கயிற்றினால் கட்டியும் மனதில் துவேஷம் வைத்திருப்பவர்களை அங்குசத்தால் களைந்தெறிந்தும் இவ்வாறு பல ஆயுதங்களைத் தாங்கி அனைவரையும் நல்வழிப் படுத்தும் வகையில் தேவியின் திருவுருவம் காட்சி தருகின்றது என்பதை மேற்கூறிய உபநிஷதத்தின் மூலம் அறிய முடிகிறது.

அம்பிகை தனது இருகரங்களில் எந்தவொரு ஆயுதங்களையும் ஏந்தாத வண்ணம் அபய, வரதகரங்களாக வைத்திருக்கின்றாள்.

**ஞானக் கதிர்**

அனைவரும் தன்னை ஆராதித்து அருள்பெற வேண்டும் என அம்பிகையானவள் பாரத தேசத்தில் சிறப்பாக காஞ்சியில் ஏகாம்பர நாதரோடு காமாட்சியாகவும், சிதம்பரத்தில் ஸ்ரீநடராஜரோடு கூட சிவகாமசுந்தரியாகவும், காசி க்ஷேத்திரத்தில் விஸ்வநாதரோடு உறையும் விசாலாட்சி ஆகவும், மதுரையில் சோமசுந்தரபெருமான் நாயகியாக மீனாட்சி ஆகவும், ஜம்புகேஸ்வரத்தில் அகிலாண்டேஸ்வரி தண்டினியாகவும், சிருங்கேரியில் சாரதாவாகவும், மைசூரில் சாமுண்டேஸ்வரியாகவும், கேரளாவில் பகவதியாகவும், அருள் பாலிப்பதோடு இலங்காபுரி

**சபா வாசுதேவசர்மா**

யில் கேதீஸ்வர நாதரோடு கௌரியம்பாள் ஆகவும், கோணேச நாதரோடு கூட மாதுமை ஆகவும், நகுலேஸ்வரரோடு நகுலாம்பிகையாகவும், முன்னேஸ்வர பெருமானுடன் வடிவாம்பாளா ஆகவும் இன்னும் உலகெங்கும்பலஇடங்களில் பலநாமங்களில் தனித்தும், சிவனுடன் சேர்ந்தும் அருள் ஆட்சி புரிந்து வருகின்றாள்.

தேவி பாகவதம், பிரம்மாண்ட புராணம், தேவி மகாத்மீகம், மார்க்கண்டேய புராணம், ஆகம ரகசியம், சம்ஹிதை, யாளமம், தந்திரம், பாகவதம் போன்ற நூல்கள் மூலம் அம்பிகையின் சிறப்புக்களை அறிய முடிகின்றது. இன்று அம்பிகையின் பூஜை வழிபாட்டு முறைகள் ''பரசுராம கல்ப சூத்ரம்'' என்னும் நூலின் பிரகாரம் வந்தவையே ஆகும். எங்கும் நிறைந்து அருள்பாலிக்கின்ற அம்பிகையினை தினமும்வழிபாடாற்றி சுபோகமிக்க பெருவாழ்வு வாழ்வோமாக. ★

# குடாநாட்டு அதிகாரிகளில் பலரும் தமது அதிகாரங்களை பகிரத்தயங்குவது ஏன்?

மக்கள் அரங்கத்தில் (உதயன் 11-08-98) பாடசாலை அதிபர்கள் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதில் அனுபவிக்கும் சிரமங்களை இளைப்பாறிய அதிபர் வே. சிவராசா விவரித்திருந்தார்.

அவர் முன்வைத்த கருத்துக்களில் முக்கியமானவை வருமாறு:–

1. அதிபர், ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதை ஒரு நிவாரணமாகவே கல்வித் திணைக்கள அதிகாரிகள் கருதுகின்றனர்.

2. ஓய்வு பெறுபவர் கொடுக்கும் முன்னறிவித்தல் யாழ்ப்பாணத்திலும், திருமலையிலும், கொழும்பிலும் அகமாதக் கணக்கில் உறங்கு நிலையில் இருக்கிறது.

3. ஏனைய பிரதேசங்

**எஸ். பி. செந்தூரன்**

களில், இடைக்கால ஓய்வூதியம் நிறுத்தப்பட்டு ஓரு மாதங்களில் நிரந்தர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

4. கல்வித் திணைக்களத்தில் பணியாற்றுவோரிடம் அதிகார மேலாண்மையும் உதாசீனப் போக்கும் காணப்படுகிறது.

இந்நிலைக்குக் காரணமென்ன? திரு. சிவராசா அதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அதை விரிவாக ஆராய்வது அவசியம். பொது எழுதுவினைஞர் சேவை, இணைந்த சேவைகளின் கீழ் வருவது. இந்தச் சேவையைச் சேர்ந்தவர்கள் பல திணைக்களங்களில் கடமையாற்றுவர். உதாரணமாக கல்வி, சுகாதாரம், பொது நிர்வாகம், பெருந் தெருக்கள், கட்டடங்கள ஆகிய திணைக்களங்களில்.




இந்தத் திணைக்களங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர் குறைந்தது 4 வருடத்துக்கொருமுறை இடமாற்றம் பெறவேண்டியவர்கள். யாழ்ப்பாணத்துக்கு வெளிமாவட்டங்களிலிருந்து வருவதற்குப் பெரும் எண்ணிக்கையானோர் விண்ணப்பிப்பதால் இந்நடைமுறை 1983-க்கு முன் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

ஆனால் கடந்த பத்துப் பதினைந்தாண்டுகளாக நிலவும் போர் சூழ்நிலையாலும், மாகாண சபைகள் நடைமுறைக்கு வந்ததாலும் இடமாற்றங்கள் நடைபெறவில்லை.

இதன் விளைவாக திணைக்களங்களில்—குறிப்பாக கல்வித் திணைக்களத்தில் — பல அதிகாரிகள் வேரூன்றி விட்டார்கள். அவர்களிடையே ஏனோ தானோ என்ற மனோபாவமும், அசமந்தப் போக்கும்—ஏன் அதிகார மேலாண்மையும் — தலையெடுத்துவிட்டன. அவர்கள் தம்மை தவிர்க்க முடியாதவர்கள் (Indispensable) ஆகக் கருதத் தொடங்கி விட்டார்கள். பாவம், சில பணிப்பாளர்கள் இந்த மூத்த எழுதுவினைஞர்களுடைய பணயக் கைதிகளாகக்காலத்தைஓட்டுகிறார்கள்.

திரு. சிவராசா ஒரு தொழிற்சங்கவாதி. பொது நலம் பற்றிச் சிந்திக்கிறார். அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார். ஆனால் எத்தனை ஆசிரியர்கள் தம் நிலுவைகளுக்கும் ஓய்வூதியத்துக்கும் திணைக்களப் படி ஏறி ஏறி அலுத்துப் போய்ப் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரப் பரவலாக்கல் என்று தமிழினமே தலையை உடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் குடாநாட்டில் பணிபுரியும் எம்முடைய அதிகாரிகளில் பெரும்பாலோர், அதிகாரங்களைப் பகிரத் தயாராயில்லை என்பது கசப்பான யதார்த்தம். பல திணைக்களங்களில் உயர் மட்டத்தில், முரண்பாடுகள் மலிந்துள்ளமைக்கு இதுவே காரணம்.

காலனித்துவ மனோபாவத்தோடு வாழும் ஓர் இனத்துக்கு, அதிகாரப்பரவலாக்கத்துக்காகப் போராடும் தார்மீக உரிமை தானும் உண்டா? ★

**நாளை**

புரட்டாதி - 10
சனிக்கிழமை
திதி: பஞ்சமி
முற்பகல்: 07.45 வரை
நட்சத்திரம்: அனுஷம்
முன்னிரவு 11.37 வரை;
ஷஷ்டி விரதம்
சுபநேரம்: 03.02 - 04.32
ராகுகாலம்: 09.02 - 10.32
(பகலுக்கும் இரவுக்கும் பழமையநேரப்படி)

**உதயவாக்கு**

உண்மையான ஞானி ஒருவன் ஒவ்வொன்றிலும் மெய்ப்பொருள் எதுவோ அதனையே நாடுவான்.

– சோக்ரட்டீஸ்

## ஊர்காவற்றுறையில் நாய்களுக்குத் தடுப்பூசி

திருநெல்வேலி, செப். 25

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடை ஊசி மருந்து போடப்பட்டு வருகின்றது.

கடந்த 23 ஆம் திகதியன்று ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகம், கரம்பன் கிறிஸ்தவ தேவாலயம், நாரந்தனை கிறிஸ்தவ தேவாலயம் ஆகிய இடங்களில் வைத்து இத்தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டது.

எதிர்வரும் 30 ஆம் திகதியன்று வேலணை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம், துறையூர் சனசமூக நிலையம், அம்மன் கோயிலடி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் இத்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, மநைந்தீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களிலும் இத்தடுப்பு ஊசி மருந்து போடப்படவுள்ளது.

(ஐ-135)

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, செப். 25

சனத்தொகையும் குடும்ப நலக் கல்வியும் தொடர்பான பெற்றோருக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என உடுவில் கல்விக் கோட்ட அதிகாரி அ. தற்பரானந்தன் அறிவித்துள்ளார்.

ஆண்டு 6 முதல் 11 வரை ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஐந்து பெற்றோர்களை இதில கலந்துகொள்ள அனுப்பிவைக்க வேண்டுமென அதிபர்களுக்கு அவர் அறிவித்துள்ளார். (ஐ-152)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 11 ஆயிரம் தென்னை, 18 ஆயிரம் பனைகள் தென்மராட்சிப் பகுதிகளில் அழிக்கப்பட்டன

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், செப். 25

தென்மராட்சிப் பகுதியில் 11 ஆயிரத்து 149 தென்னை மரங்களும். 18 ஆயிரத்து 381 பனை மரங்களும் அழிக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், கிராமசேவை உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தென்மராட்சியில் தற்பொழுது 2 லட்சத்து 34 ஆயிரத்து 703 தென்னை மரங்களும், 3 லட்சத்து 19 ஆயிரத்து 176 பனை மரங்களும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு கைதடியில் 2 ஆயிரத்து 500 தென்னை நாற்றுகள் போடப்பட்டுள்ளதாக இக்கூட்டத்தில் கலந்துகொண்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இப்பகுதிகளிலுள்ள பெரிய தென்னந்தோட்டங்கள் பராமரிப்பு இல்லாமல் இருப்பதால் இளநீர் கூடுதலாக வெட்டப்படுவதுடன் மரங்கள் தறிக்கப்படுவதினாலும் தேங்காயின் விலை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் வருமாறு:-

★ கைதடி சுமநல சேவை நிலையத்தில் விலைப்படாமலிருக்கும் 500 மண்வெட்டிகளையும் வேறிடத்திற்கு மாற்றுதல் வேண்டும்.

★ 1998 — 99 ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியை வழமைபோல் நடத்துவதெனவும் இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் திட்டப்பணிப்பாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

★ இராணுவ பாதுகாப்பு அரண் காரணமாக நாவற்குழி மேற்கு செம்பாட்டான் பகுதியில் 35 முழுநேர விவசாயிகளின் செய்கைக்கான நிலம், செய்கை மேற்கொள்ள முடியாத நிலையிலிருப்பதாகவும். இப்பகுதியில் ஒருபகுதியையேனும் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதற்கு அவற்றின் விவரங்களை வழங்குமாறும் நாவற்குழி மேற்கு கிராம உத்தியோகத்தர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

★ பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் 147 பேருக்கு மண்வெட்டிகள் வழங்கப்படவிருப்பதாகவும், ஒருங்கிணைந்த பீட முகாமைத்துவத்திற்காக பெண்கள் தலைமைதாங்கும் குடும்பத்திலிருந்து 25 பேரும், நெற்செய்கைக்கு 60 பேரும் உயிரியல் வள வீட்டுத்தோட்டத்திற்கு 175 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் 'கெயர்' பிரதிநிதி தெரிவித்தார்.

★ சாவகச்சேரி நகரம், கைதடி. நாவற்குழி. கொடிகாமம் ஆகிய சிறு நகர்ப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி வழங்கவேண்டாமெனத் தெரிவிக்கப்பட்டது,

★ 'யுனிசெவ்' திட்டத்தில் மட்டுவில் மத்தி. கொடிகாமம் மத்தி, கைதடி மேற்கு ஆகிய இடங்களில் முன்பள்ளி கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், 75 மலசலகூடங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பு பல்கலை துணைவேந்தரை தெரிவு செய்ய குழு

கொழும்பு, செப. 25

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு புதிய உபவேந்தரைத் தெரிவு செய்வதற்குத் தகுதியுடைய எவரும் விண்ணப்பிக்காததைத் தொடர்ந்து பொருத்தமான ஒருவரைத் தேடும் நோக்கில் நிர்வாக சபையினால் ''தேடும் குழு'' (Search Committy) ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய ஒரு பிரதிநிதியும் பல்கலைக்கழகத்துடன் தொடர்பற்ற இரு பிரதிநிதிகளும் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

துணைவேந்தராக நியமிக்கத் தகுதியுடைய மூவரை பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது பல்கலைக்கழகத்திற்கு வெளியே அல்லது வெளிநாட்டில் இருப்பினும் சிபாரிசு செய்யுமாறு இக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன— எனவும் அதற்கிணங்க விண்ணப்பித்த ஏழு விண்ணப்பதாரிகளில் ஒருவர் மாத்திரமே அந்தப் பதவிக்கான தகைமைகளைக் கொண்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தர் ஒருவரை நியமிக்கும் போது கட்டாயமாகத் தகுதியுடைய மூன்று விண்ணப்பதாரர்களின் தகைமைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு அந்த மூவரில் ஒருவரே துணைவேந்தராக நியமிக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

'திவயின' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டுள்ளது. (ஐ-10)

## லயன்ஸ் பிராந்திய தலைவர் விஜயம்

யாழ்ப்பாணம், செப். 25

நல்லூர் லயன்ஸ் கழகத்துக்கு பிராந்தியத்தலைவர் லயன் டாக்டர் எஸ். அருளானந்தம், லயன் சீமாட்டி சிவயோகத்துடன் நாளை சனிக்கிழமை உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளரர்.

இத்தினத்தை திருநெல்வேலி கலாசாலையிலுள்ள சிறுவர் நிறை வாழ்வு நிலையத்தில் ஆதரவற்ற குழந்தைகளுடன் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் லயன்ஸ்கழகத் தலைவர் பா. தவபாலன் தெரிவித்தார்.

அன்றையதினம் மேற்படி சிறுவர் நிலையத்தில் வசிக்கும் 60 சிறுவர்களுக்கு உடைகள் மற்றும் உபகரணங்களை அன்பளிப்புச் செய்வதெனவும், மதிய போசனத்தில் சிறுவர்களுடன் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கலந்து கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் இந் நிலைய சிறுவர்களுக்கு நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் இலவச கண், பல், மருத்துவப் பரிசோதனைகளை டாக்டர் ஜீ. பிரதீப்குமார் தலைமையில் மருத்துவபீட மாணவர்கள், வைத்தியர்கள் ஆகியோரைக் கொண்டு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியினருக்கு இலவச மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படவுள்ளது. (ஐ-8)

## செயலகத்தில் எட்டாவது மிதிவெடிமீட்பு

நவாலி, செப். 25

யாழ். செயலகத்தில் கடந்த செவ்வாயன்று மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டது.

இது செயலகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட 8 ஆவது மிதிவெடியாகும்.

இங்குள்ள மாநாட்டு மண்டபத்தின் முன்பாகவுள்ள பகுதியை ஊழியர் ஒருவர் துப்புரவு செய்து கொண்டிருந்த போதே நிலத்தினுள் புதையுண்டு கிடந்த மிதிவெடி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

# பண்டதரிப்பு - கீரிமலை வீதியோர வீடுகளில் குடியமருமாறு அழைப்பு

சண்டிலிப்பாய், செப். 25

பண்டத்தரிப்பு — கீரிமலை வீதியில் ஆள்கள் இல்லாத நிலையில் உள்ள வீடுகளில் அதன் உரிமையாளர்களை உடன் வந்து வசிக்குமாறு இப் பகுதிக்குப் பொறுப்பான படையினர் கிராம அலுவலர் ஊடாகக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வீதியின் இரு பக்கங்களிலுமுள்ள வீடுகளின் கதியால்களும், வேலிகளும் தறிக்கப்பட்டு வெளியாக்கப் பட்டுள்ளன. சில வீடுகளில் சுற்று மதில்களும் அகற்றப்பட்டுள்ளன.

இதேவேளை—

இப்பகுதியிலுள்ள வீட்டு உரிமையாளர்கள் பலர் தொழில் நிமித்தம் தூர இடங்களிலும், யாழ். நகரிலும் வசித்து வருகின்றனர். சொந்த வீட்டிலிருந்து தினமும் போய்வந்து பிரயாணம் செய்ய முடியாத நிலையில் இவர்கள் இவ்வாறு தமது வேலைத்தலங்களுக்கு அண்மையில் வாடகை வீடுகளில் வசித்து வருகின்றனர். (ஐ-135)

## வீதி திருத்தம்

சண்டிலிப்பாய், செப். 25

சண்டிலிப்பாய்ச் சந்தியிலிருந்து தொட்டிலடிச்சந்திக்குச் செல்லும் பிரதான வீதி பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இவ் வீதி நீண்டகாலமாக குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் இருந்து வந்தது. (ஐ-135)

## பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய் செப். 25

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் நா. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்வார். (ஐ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 25

தேவரையாளி இந்துக் கல்லூரியின் பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், மருதங்கேணி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை. அருளானந்தம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-ரீ)

## விலை வீழ்ச்சி

வெள்ளைப் பூடின் விலை குறைந்துள்ளது. நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கிலோ 70 ரூபாவாக விற்பனையாகிறது.

இதே நேரத்தில் நவராத்திரி தினங்களுக்குத் தேவையான அவல், கடலை, சர்க்கரை முதலானவை நியாயமான விலையில் இக்கிளைகளில் வழங்கப்படுகின்றன. (ஐ-154)

## ச.ச. நிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு

நவாலி, செப். 25

கடந்த கால வன்செயலின் போது சேதமடைந்த வட்டுபிளவத்தை சனசமூக நிலையத்தை புதிதாக அமைப்பதற்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைவரும், ஈ. பி. டி. பி அமைப்பாளருமான எஸ், லோகநாதன் 50 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ-100)

# ஒரு பிரஜையின் சிறப்பான வாழ்வு பாலர் கல்வியிலேயே தங்கியுள்ளது

## கலை விழாவில் உரை

வடமராட்சி, செப். 25

ஒரு பிரஜையின் எதிர்காலம் பாலர்கலவியில் தான் தங்கியுள்ளது. பாலர் கல்வி ஒரு பிரஜையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அத்திவாரம் போல் இருக்கிறது. அத்திவாரம் நன்றாக இருந்தால் தான் கட்டடம் சிறந்து மிளிர்ந்து நிற்கும். அதேபோல பாலர் கல்வியின் மகத்துவத்தில் தான் ஒரு பிரஜையின் வாழ்வின் சிறப்பும் வளமும் தங்கியுள்ளது.

இவ்வாறு துன்னாலை வசந்தம் பாலர் பாடசாலையின் கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கூறினார்.

துன்னாலை தாமரைக் குளத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் துன்னாலை மத்தி மகளிர் சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்கத் தலைவி திருமதி பி. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

மகத்துவம் மிக்க பாலர்கல்வியை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதிக்க வேண்டும். பாலர்களின் மனோநிலையை அறிந்து அவர்களுக்கு ஊட்டும் கல்விதான் சிறந்த நற்பலன்களைத் தரும். இதன் மூலம் நற்பிரஜைகளை உருவாக்க முடியும்.

பயிற்சி பெறாத பாலர் ஆசிரியர்களால் தக்க கல்வியைப் போதிக்க முடியாது. பாலர் ஆசிரியர்களாக பணியாற்றுவது மிகக் கஷ்டமான காரியமாகும். பயிற்சி பெற்ற பாலர் ஆசிரியர்களின் பணி மிகக்கடினமானது. ஆனாலும் அவர்களது பணி மிக உயர்ந்ததாகும் — என்றார்.

இவ் விழாவினை பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் ஏ. என். எஸ். திருச்செல்வம், 'போரூட்' நிறுவன திட்ட இணைப்பாளர் செல்வி மரியபுளோரா மரியாம்பிள்ளை ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். விழாவில் பங்கு கொண்ட பாலர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார். இப் பாடசாலை ஆசிரியைகளான திருமதி கே. பிரேமரூபி, செல்வி எஸ். சிவகௌரி ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்பட்டன.

மருதங்கேணி பிரதிக்கல்விப் பணிப்பாளர் வீ. அருளானந்தம், துன்னாலை காசிநாதர் [illegible] ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஐ-173)

# புறநிலைப் படிப்பு அலகின் சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய நிலையத்தில் இதுவரை நடைபெற்ற கற்கை நெறிகளில் 80 வீதமான விரிவுரைகளுக்குச் சமுகமளித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது.

தொடர்பியலுக்கான ஆங்கிலம் இரண்டு பிரிவுகளில் கற்ற மாணவர்களுக்கும், ஆங்கிலக் கற்கை நெறி, அலுவலக முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகளில் பயின்ற மாணவர்களுக்குமே இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

இம்மூன்று கற்கை நெறிகளிலும் பயின்ற 130 மாணவர்களுக்கு அன்றைய தினம் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடை பெற உள்ள இச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார். (ஐ - 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை ஆணைக்குழு முன் தாக்குதல்கள் குறித்து முறையீடு!

யாழ்ப்பாணம், செப், 25

வரணியில் படையினர் தாக்குதல் நடத்தியதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பகல் 12 மணியளவில் வரணி நாவற்காட்டுப் பகுதியிலுள்ள வீடொன்றுக்கு சென்றிருந்த இராணுவத்தினர் அந்த வீட்டில் தேடுதல் நடத்தியதுடன் வீட்டிலிருந்த தாய் மற்றும் அவரது பிள்ளைகளிடம் தவச்செல்வன் எங்கே என்று கேட்டு அவர்களைத் தாக்கினார்கள் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இந்த வீட்டின் குடும்பத் தலைவியான திருமதி தில்லைநாதன் பூரணம் (50 வயது) மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சம்பவ தினம் நானும் எனது பிள்ளைகளான தவராசா, தவராணி, தவச்செல்வி, தவரஞ்சன் ஆகியோர் வீட்டிலிருந்த பொழுது திடீரென எமது வீட்டைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் தவச்செல்வன் எங்கே என்று கேட்டார்கள்.

தவச்செல்வனும் எனது மகன்தான் என்று சொன்னேன். அவர் எங்கே இருக்கிறார் என்று காட்டித்தருமாறு என்னையும் எனது பிள்ளைகளையும் பிக்கான் பிடியாலும் தடிகளாலும் இராணுவத்தினர் தாக்கினார்கள்.

ஒரு பகுதியினர் எம் மீது தாக்குதல் நடத்த இன்னொரு பகுதியினர் வீட்டுக்குள் நுழைந்து தேடுதல் நடத்தினார்கள். தேடுதலின் போது உள்ளே இருந்த பொருள்களைக் கண்டபடி தூக்கி வீசினார்கள்.

பின்னர் வீட்டில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் முழுவதையும் வண்டிலில் ஏற்றிச் சென்றதுடன் இரண்டாயிரம் ரூபா காசையும் எடுத்துச்சென்றனர்.

இப்படி அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்தார்.

வரணி இயற்றாலையைச் சேர்ந்த திருமதி நடராசா சின்னப்பிள்ளை (47 வயது) என்பவர் தன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேற்று முன்தினம் பகல் 11. 30 மணியளவில் நான் வீட்டிலிருந்த பொழுது எமது வீட்டை 50 அல்லது 60 இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். ச. தவச்செல்வனை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்று கேட்டுத்தாக்கினார்கள்.

''தவச்செல்வன்'' எனது சிறிய தாயாரின் மகன் ஜி சீ. ஈ உயர்தர வகுப்புப் படிக்கிறார். இறுதியாக கடந்த செவ்வாய்க்கிழமை எனது வீட்டில் வந்து சாப்பிட்டு விட்டுப் போனார் அதன் பின்னர் காணவில்லை'' என்று சொன்னபோது எனது தலைமயிரைப் பிடித்து இழுத்து கம்பாலும், கைகாலாலும் தாக்கினார்கள். நான் ஐயோ என்று சத்தம் போட்டுக் குழறினேன் பக்கத்து வீட்டு ஆள்கள் சத்தம் கேட்டு ஓடி வந்த போது வெளியே நின்ற இராணுவத்தினர் அவர்களை உள்ளே வர விடவில்லை.

என்னை ஒரு மூலைக்குள் பிடித்து அமத்திவைத்திருந்த படையினர் எனது கைகளை பின்புறமாகக் கட்டி விட்டு 'சொப்பிங் பாக்'கினால் எனது தலையை மூடி மூச்சுவராதபடி இறுக்கினார்கள். நான் பற்களால் சொப்பிங் பாக்கை ஓட்டையாக்கி மூச்சு விட்டு படையினரின் பிடியிலிருந்து விடுபடப் போராடினேன். பின்னர் எனக்கு தலை சுற்றுவது போலிருந்தது நான் கீழ இருந்து விட்டேன்.

இறுதியில் என்னைத் தம்முடன் அழைத்துச் சென்ற இராணுவத்தினர் கொடிகாமம் அல்லாரை முகாமில் என்னை ஒப்படைத்தனர். அங்கே என்னை விசாரணை செய்த அதிகாரியிடம் எனக்கு நடந்தவைகளைக் கூறினேன் அவர் எனது கன்னத்தில் ஏற்பட்ட கண்டல் காயத்திற்கு ஒயின்மன்ற் பூசிவிட்டதுடன் தவச்செல்வன் எங்கே என்று உண்மையைக் கூறாது விட்டால் காங்கேசன்துறைக்கு அனுப்பப் போவதாக மிரட்டினார்.

பின்னர் எனது வீட்டிலிருந்து இராணுவத்தால் எடுத்து வரபபட்ட குளுக்கோஸ் போத்தலையும், வயரையும் காட்டி இது புலிகளுடையது என்று சொன்னார்.

எனக்கு 15 நாளைக்கு ஒரு தடவை மலேரியா வருவது வழக்கம் அதனால் ஏற்படும பலவீனத்திற்காக ஒரு டாக்டரின் உதவியுடன குளுக்கோஸ் ஏற்றுவேன் என்று சொன்னேன் மாலை 6 மணியளவில் என்னை அங்கிருந்து விடுவித்தனர். ஆனால் எமது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட எனது கணவரின் சைக்கிள் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

இப்படி அவர் தெரிவித்தார்.

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த திருமதி நீலயினார் சரஸ்வதி என்பவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது:

நேற்று முன்தினம் எனது மகன் சுதாஸ்தீபன் (17வயது) என்பவரைத் தேடி எமது வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் வீட்டிலிருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காதுச் சிமிக்கியை எடுத்துச் சென்றனர்.

இராணுவத்தினர் தேடி வந்த எனது மகன் கொடிகாமத்தில் வான்ட்மாஸ்டர் சாரதியாக இருக்கிறார்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 25

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் தனது கழக மைதானத்தில் நடத்தும் — ஏழு பேர் கொண்ட — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5-00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் நக்கீரன் 'பி' அணியை எதிர்த்து திக்கம் அணி மோதும். (இ-3)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 16 வயது. 18 வயது ஆகிய பிரிவுகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகளும் மூன்றாம் இடத்துக்கான போட்டிகளும் இன்று காலை 8-30 மணி முதல் சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு.செ. சரவணபவ கலந்து கொள்வார்.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**3 ஆம் இடத்துக்கான ஆட்டம்**

★ காலை 8-30 மணி முதல் — 16 வயதுப் பிரிவு — சாவகச்சேரி டிறிபேர்க் எதிர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

★ 18 வயதுப் பிரிவு— மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. எதிர் டிறிபேர்க் கல்லூரி.

**இறுதி ஆட்டம்**

★ பிறபகல் 2-00 மணி முதல் — 16 வயதுப் பிரிவு — சாவகச்சேரி இந்து எதிர் நாவற்குழி ம.வி.

★ 18 வயதுப் பிரிவு — நாவற்குழி ம.வி. எதிர் சாவகச்சேரி இந்து. (இ-3-117)

## கண்காட்சி

சாவகச்சேரி - கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அறவழிச் செயலகத்தில் நாளை சனிகாலை 9 மணிக்கு தையல் — பனங்கைப்பணிக் கண்காட்சியும், பொருள்கள் விற்பனையும் அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் வீ. ஜீ. தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த கண்காட்சியில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவவும், சிறப்பு விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் எஸ் கோகுலதாசனும் கலந்து கொள்வர்.

கணகாட்சி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும், கண்காட்சிப் பொருள்கள் விற்பனை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப் 25

சுன்னாகம் கோட்டைக்காடு அ. த. க. பாடசாலையின் புனரமைப்பு வேலைகள் 2 லட்சம் ரூபா செலவில் பூர்த்தியடைந்ததையிட்டு இந்த வருடம் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் விஜயதசமி தினத்தில் பாடசாலையில் கலை நிகழ்ச்சிகளும், வித்தியாரம்பமும் இடம்பெறும். பெற்றோரினதும், நலன் விரும்பிகளினதும், கல்வித் திணைக்களத்தினதும் முயற்சியால் இப்பாடசாலை கடந்த சில வருடங்களாக பௌதிகவளங்களைப்பூர்த்தி செய்துள்ளது. (ஐ-8)

★ ★ ★

யாழ். செயலக நலன்புரிச் சங்கம நடத்தும் நவராத்திரி விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக அரச அதிபர் இ. வைத்திலிங்கம் சொற்பொழிவாற்றுவார் தொடர்ந்து யாழ். மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு சிறப்புரை ஆற்றுவார். வேம்படி மகளிர்கல்லூரி, சுண்டுக்குளிமகளிர்கல்லூரி மாணவிகள். ஆசிரியர்கள் வழங்கும் பக்திப் பாமாலை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. (ஐ-100)

## மிதிவெடியில் சிக்கினார்

யாழ்ப்பாணம், செப். 25

முயல்வேட்டைக்குச் சென்றவர் பாதைவிலகிச் சென்ற சமயம் மிதிவெடியில் சிக்கி இடதுகாலை முழங்காலுக்குக்கீழ் இழந்தார்.

மல்லாகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொன்சன்ரைன் ஜோன் மைக்கண்டோ (வயது 19) என்பவரே கால் இழந்து படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15-139)

## நீர்விநியோகம் தொடர்பான கூட்டம்

வலி. தெற்கு, செப். 25

கந்தரோடைப் பகுதியில் வழங்கப்பட்டுவரும் குழாய் நீர் விநியோகத்தை விஸ்தரிப்பது தொடர்பான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நடைபெறும். கூட்டத்தில் ஜேர்மன் தொண்டு நிறுவனமான ஜீ. ரி. இசெற் அதிகாரிகள், நீர் வழங்கு சபை அதிகாரிகள், பிரதேச செயலர் உடுவில் — பிரதேச சபை தலைவர் உட்பட குடிநீர்ப்பயனாளிகள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ - 152)

## கந்தபுராண முற்றோதல்

யாழ்ப்பாணம், செப் 25

மீசாலை தெற்கு சித்திர வேலாயுதர் தேவஸ்தானத்தில் இன்று காலை கந்தபுராண முற்றோதல் ஆரம்பமாகி திருக்கார்த்திகைத் தினத்தன்று நிறைவுபெறும்.

கந்தபுராண முற்றோதல் படிப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தினமும் காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரையும். பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் கலந்து கொள்ளலாம் என இந்து இளைஞர் பேரவைத் தலைவா தெரிவித்துள்ளார். (இ-31)

## விவேகானந்த சபை பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.25

கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் இவ்வருடத்திற்கான அகில இலங்கை சைவ சமய பாடப் பரீட்சையை இம்முறை யாழ். மாவட்டத்திலும் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் இப்பரீட்சை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது. இதற்கான அறிவுறுத்தல்களை சேவாச்சிரம செயலாளர் சுவாமி சித்ரூபானந்தாவுக்கு கொழும்பிலுள்ள விவேகானந்தா சபையின் செயலாளர் க. இராஜபுவனீஸ்வரன் அனுப்பி வைத்துள்ளார். (ஐ-135)

## கலந்துரையாடல்

வலி. கிழக்கு பிரதேச சபையின் கீழுள்ள சனசமூக நிலையங்களுக்கு புனரமைப்பு வேலைகளுக்கென, ஒதுக்கப்பட்ட விசேட நன்கொடை சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வெள்ளி காலை 9 மணிக்கு நீர்வேலியிலுள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது. (ஐ-109)

★ ★ ★

நெல்லியடி. செப். 25

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு கோப்பாய் உப அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது. (ஐ-109)

## குருநகர் இறங்குதுறையில் கைதான குருநகர் இளைஞருக்கு பிணை

யாழ்ப்பாணம், செப். 25

வன்னியிலிருந்து குருநகர் வந்து சேர்ந்தபோது கடற்படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலீஸாரினால் ஊர்காவற்றுறை அமர்வு நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட இரு இளைஞர்களை 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு அனுமதித்தார்.

கடந்த 21 ஆம் திகதி வன்னியிலிருந்து வந்த இவர்கள் அனுமதியற்ற வள்ளத்தில் வந்ததினாலும் —

வன்னியிலிருந்து வருபவர்கள் கரையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் கடலில் தரித்துள்ள படையினரிடம் அனுமதி பெறும் நடைமுறையைப் பின்பற்றாமல் நேரடியாக குருநகர் கரைக்கு வந்து சேர்ந்ததாலும் —

இவர்களிடம் அடையாள அட்டைகள் எதுவுமில்லாததாலும் — இவர்கள் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களாக இருக்கலாம் என்று பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கா. மு. இராதாகிருஷ்ணன், இவர்கள் தாங்க முடியாத கஷ்டத்தின் மத்தியில் வன்னியிலிருந்து கடல் ஏரி ஊடாக சொந்தப் பிரதேசத்தில் வசிப்பதற்காக வந்தவர்கள். இவர்களை பிணையில்செல்ல அனுமதிக்கவேண்டும் என்று நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார்.

சட்டத்தரணியின் கோரிக்கையையடுத்து சந்தேக நபர்களான குருநகரைச் சேர்ந்த அருளப்பு ஐசன் (38 வயது), அருளப்பு ரவி (30 வயது) ஆகியோரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (இ-5)

## நெடுந்தீவில் கரை ஒதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம், செப். 25

நெடுந்தீவில் உருக்குலைந்த நிலையில மனித சடலம் ஒன்று கரையொதுங்கியது தொடர்பாக நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை அமர்வு நீதிமன்றத்தில் பொலீஸாரினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

உருக்குலைந்த நிலையில் இச்சடலம் கரையொதுங்கியுள்ளதால் ஆணினுடைய சடலமா? பெண்ணினுடைய சடலமா என்பதை அடையாளம் காணமுடியாமலிருப்பதாகப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தார்.

இச்சடலத்தை பிரேத பரிசோதனை செய்து மரண விசாரணை நடத்தி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்பிக்குமாறும் 3 நாள்களுக்குள் சடலம் அடையாளம் காணப் [illegible] நீதிவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார். (இ-5)

## தொலைக்கல்வி ஆசிரியர்கள் கவனத்துக்கு

யாழ். கல்வி வலயம் ஒன்றைச் சார்ந்த தொலைக் கல்வி நிலையங்களுடாக 1997 ஆம் ஆண்டு தொலைக் கல்வி ஆசிரியர் இறுதிப் பரீட்சையில் தோற்றி பெறுபேறு கிடைக்காதவர்கள் தங்கள் விவரங்களை யாழ். இந்துக்கல்லூரி தொலைக் கல்வி நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பதியுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (இ-3)

★ ★ ★

கரவெட்டி, பருத்தித்துறை தொலைக் கல்வி நிலையங்களிலிருந்து 1995 ஆம் 96 ஆம் ஆண்டுகளில் தொலைக்கல்வி பகுதி 1 பகுதி 11 இறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்றி இற்றை வரை பெறுபேறுகளைப் பெறத் தவறிய சகல ஆசிரியர்களையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் சமுகம் கொடுக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கு. சுருமசிறிராஜா தெரிவித்துள்ளார். (ஐ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கருதலாம். அவ்வாறாயின் வீட்டில் தரித்திருக்காமல் அண்மையில் உள்ள வைத்திய சாலைக்குச் சென்று உடனடியாகச் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள். அவசரமாக உரிய சிகிச்சைகள் பெறப்பட்டால் கொலரா நோயைக் குணப்படுத்திக்கொள்ளலாம்.

★ எப்பொழுதும் கொதித்து ஆறிய நீரைப் பருகுங்கள்

★ பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குக் கொண்டு செல்வதற்காக வீட்டிலேயே நீர்ப்புட்டி ஒன்றைத் தயாரித்துக் கொடுங்கள்.

★ பழங்களை நன்றாகக் கழுவியும், கீரை வகைகளை நன்றாகச் சமைத்தும் உண்ணுங்கள்.

★ சமைக்கப்பட்ட உணவை மீண்டும் பாவனைக்கெடுக்கும் பொழுது அதை நன்றாகச் சூடாக்குங்கள்.

★ கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமைத்த உணவுகளை மட்டும் உண்ணுங்கள்.

★ பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைக்கு எப்பொழுதும் கொண்டு செல்வதற்கு வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளைக் கொடுங்கள்.

★ சந்தேகத்திற்கிடமான ஐஸ் பக்கெட், ஐஸ்கிறீம் மூடப்படாமல் வெளியில் வைக்கப்பட்டுள்ள உணவுகள் என்பனவற்றை உண்ண வேண்டாம் என்று பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுங்கள்.

★ உணவு சமைப்பதற்கு முன்பும், மலசலகூடம் சென்ற பின்னரும் சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுங்கள்.

★ எப்பொழுதும் மலம் கழிப்பதற்காக மலசல கூடமொன்றைப் பாவியுங்கள்.

★ சிறு பிள்ளைகளின் மலத்தை மலசல கூடங்களுக்குள் போடுங்கள்.

(இ-3-15-139)


NEW SCIENCE COLLEGE
JAFFNA.
2000 A/L
பொறியியல்
திரு சம்பந்தன்
சனி, ஞாயிறு 9-00 மணி
(59412)


# வர்த்தகர்களை சமமாக பாவித்து நடக்கும் மனோபக்குவம் தேவை

## சமாசத் தலைவருக்கு வர்த்தகர்கள் பதில்

யாழ்ப்பாணம், செப். 25

''யாழ்ப்பாணத்தில் உள்ள சகல வர்த்தகர்களையும் சமமாக பாவித்து நடக்கும் மனோபக்குவம் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவருக்கு இனிமேலாவது வர வேண்டும்.''

யாழ். நகரில் உள்ள 35-க்கு மேற்பட்ட தனியார் வர்த்தகர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

''கூட்டுறவுத்துறையின் கப்பல் விடயத்தில் தனியார் துறை ஏன் குறுக்கிடுகின்றது'' என்ற தலைப்பில் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி, நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் விடுத்த அறிக்கை தொடர்பாக யாழ். வர்த்தகர்கள் வணிகர் கழகத்துக்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்ட விவசாய, உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் கப்பல் விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

இது வர்த்தகர்களுக்கு அதிர்ச்சி தரும் விடயமாக அமைந்துள்ளது.

இந்த நடவடிக்கையில் சமாசம் நட்டம் அடையாதிருப்பதற்காக கப்பலில் பொருள் ஏற்றுபவர்களின் எண்ணிக்கையை குறைத்து ஒழுங்குகள் செய்யப்பட்டதாகவும், துரித கெதியில் ஏற்றவும் இறக்கவும் வசதிப்படும் எனவும் கூறுகிறார்.

கப்பலில் கூடிய வர்த்தகர்களுக்கு பொருள்கள் ஏற்றும் பட்சத்தில் —

துறைமுகத்தில் போதிய அளவு வாகனங்கள் பொருள்களுடன் காத்து நிற்கும் பொழுது —

கப்பலில் பொருள்கள் ஏற்றப்படுவதில் எவ்வித கால தாமதமும் ஏற்படாது. ஆனால் ஒரு சில வர்த்தகர்களுக்கு மட்டும் பொருள்கள் ஏற்றும்போது நாள்கள் கூடுதலாக பிடிப்பதை தலைவர் எண்ணிப்பார்க்கவில்லை போலும்.

மேலும் இக்கப்பலில் வந்த தனியார் வர்த்தகர்களின் பொருள்கள் யாவும் துறைமுகத்தில் இருந்து நேரடியாக தனியார் நிறுவனங்களுக்கே கொண்டு வரப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்படி கைவிரல் விட்டு எண்ணக்கூடிய சில வர்த்தகர்கள் இதில் வந்த பொருள்களை மக்களுக்கு தாரளமாக குறைந்த விலைக்கு விநியோகிக்க முடியும்.

ஆனால் அப்படி இருந்தும் கூட சிமெந்தின் விலை சமாசத்தினால் ரூ. 525 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் ஏற்றிவந்த தனியார் வர்த்தகர்களோ சிமெந்தை ரூ. 625 ஆக விற்கிறார்கள். இதை எண்ணிப் பார்க்கும் பொழுது ஒருசில வர்த்தகர்களை மட்டும் முன்நிலைப்படுத்தும் நோக்கம் தான் தலைவரின் உள்நோக்கம் போல் தெரிகிறது.

இதில் பாரபட்சமின்றி எல்லா வர்த்தகர்களுக்கும் மனத்தாங்கல் இல்லாதவாறு நடந்திருந்தால் பிரச்சினை ஒன்றும் இருக்காது. எல்லா வர்த்தகர்களையும் சமமாக பாவித்து நடக்கும் மனோபக்குவம் தலைவருக்கு இனியாவது வரவேண்டும்.

இன்னுமொரு விடயம் என்னவென்றால் இக்கப்பலில் பொருள்கள் கொண்டு வராத வர்த்தகர்கள் 99 சதவீதமானவர்கள். அப்படி இருக்கும் போது இந்த 99 சத வீதமான வர்த்தகர்களினது மனதை புண்படுத்தும் செயலாகவும் இது அமைந்துள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


வீடியோ
CD வெளியீடு!
பிரசாந்த் - சிம்ரான்
நடித்த
கண்ணெதிரே
தோன்றினாள்
எமது புதிய ஓடியோ
CD வெளியீடுகள்!
சின்ன ராஜா
இருளும் ஒளியும்
கோடீஸ்வரன்
உறவுக்கு மரியாதை
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/4983)


## மந்துவில் பகுதியில் இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், செப். 25

மந்துவில் பகுதியில்காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு தலையில்லாத இனந்தெரியாத சடலம் ஒன்று நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரியில், சாவகச்சேரி பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

நீலக் கோடிட்ட சாரத்துடனும் வெண் பச்சை நிறச் ஷேர்ட்டுடனும் காணப்பட்ட இச்சடலம் துர்நாற்றம் வீசிய நிலையில் இருந்தது.

சடலம் இனம் காணும் பொருட்டும் மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

அதேநேரம்—இச்சடலத்தின் அருகில் தலையும் காணப்பட்டதாக தகவல் ஒன்று நேற்றிரவு கிடைத்தபோதும் — அது தொடர்பாக வைத்திய சாலையில் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

(இ-3-15-139)

## ஊர்காவற்றுறையில் நேற்று இறுதிக் கிரியை

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரியில் இடம் பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த ஈ. பி. டி. பி. அமைப்பின் பச்சிலைப்பள்ளிபிரதேச சபை உறுப்பினர் செல்வன் நந்தகுமாரின் (நந்தன்) இறுதிக் கிரியைகள் நேற்று இரவு ஊர்காவற்றுறையில் நடைபெற்றன.

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று அவரது மரணவிசாரணையும், பிரேத பரிசோதனையும் இடம் பெற்றதையடுத்து சடலம் நேற்று மாலை 5 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின் யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ. பி. டி. பி. அமைப்பு அலுவலகத்தில் வைக்கப்பட்டு, மக்கள் அஞ்சலியின் பின்னர் ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குதகனஞ் செய்யப்பட்டது.

ஈ. பி. டி. பியின் பொறுப்பில் உள்ள 10 பிரதேசசபைகளும் நேற்றுக் காலை கூடி அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணைகளை நிறைவேற்றிய பின்னர் துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் அந்த பிரதேச சபைகளின் அலுவலகங்கள் மூடப்பட்டன. (இ-3)

## வடக்கு—கிழக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் பதவியை அவர் ராஜினாமாச் செய்துவிட்டார் என்று வெளியான செய்தி குறித்து பி. பி. ஸி சிங்கள சேவை அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ள கடிதத்தில், தமது பதவியை ராஜினாமாச் செய்ய விரும்புவதாகத் தாம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (இ-3-10-7)

## பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்)

அதிகாரி மூலம்மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறும்-

இறந்த சிப்பாயின் சடலத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும்- நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை — இச்சம்பவத்தின் பின்னர் காணாமற் போன பிரதேச சபை உறுப்பினர்கள் ஐவர் குறித்து இன்னமும் தகவல் கிடைக்கவில்லை என்றும்—

சாவகச்சேரிக்கு செல்ல எமது அமைப்பினருக்கு அனுமதி கிடைக்காததால் அவர்கள் குறித்து அறிய முடியவில்லை என்றும்- 'புளொட்' வட்டாரங்கள் தெரிவித்தன.

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரகசிய ஒப்பந்தமோ அல்லது பேச்சுவார்த்தையோ வேண்டாமென ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோஷமெழுப்பினர்.

இதே போன்ற ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று கடந்த திங்களன்று கொழும்பிலும் நடத்தப்பட்டது.

அதிலும் பௌத்த பிக்குமார் உட்பட பெரும் எண்ணிக்கையான பெரும்பான்மை இனத்தவர்கள் கலந்து கொண்டனர்.

(இ-7)

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்)

போராட்டம் மாலை 3 மணி வரையும் நடைபெறும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்னால் சுலோக அட்டைகளை தாங்கியவாறு இருந்து அமைதியான முறையில் இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

செம்மணிபுதைகுழி விவகாரத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? காணாமல் போனோரைத் தேடிக்கண்டு பிடிப்பதில் ஏன் அசமந்தப் போக்கு? என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இச் சாத்வீக போராட்டத்தின் போது பொது அமைப்புகளின் பிரதிநிதிகளினால் கேள்விகள் எழுப்பப்படும்.

போராட்டத்தின் இறுதியில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் மகஜர் ஒன்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

இது போன்றபோராட்டங்களை யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள் முன்பாகத் தொடர்ந்து நடத்துவதற்கும் மேற்படி பொது அமைப்புகள் தீர்மானித்துள்ளன. (இ-3-5)

## ஜயலத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

அவரின் விண்ணப்பம் மிக அவதானமாக ஆராயப்பட்டு வருவதாகப் பாதுகாப்பு அமைச்சு மேலதிகச் செயலர் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த தடவை மடுவுக்கு இவர் சென்ற சமயம் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் பேசினார் என்ற தகவல் வெளியாகியுள்ளதாலேயே இம்முறை அவரின் அனுமதி விண்ணப்பம் மிக அவதானமாக ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)


முக்கிய
அறிவித்தல்
யாழ். றோட்டறிக் கழகம்
27-09-1998 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த இன்ரறக் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு 3-10 98 சனிக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது.
தலைவர்
றோட்டறிக் கழகம்
(சி/4981)



எமது புதிய
வெளியீடு!
ஜெயராம்
குமாரி சாலினி நடித்த
நிலவே உனக்காக
எமது இன்றைய
புதிய CD வெளியீடு!
பிரசாந்த் - சிம்ரான்
கண்ணெதிரே
தோன்றினாள்
CD வெளியீடுகள்!
செந்தூரம்
புதிய பாதை
நான் அடிமை இல்லை
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/4982)



இதோ வந்துவிட்டன!
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
தீபாவளி வாழ்த்து மடல்கள்
(தெய்வ, சினிமா வடிவங்களில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
✠ வியாபாரிகளுக்கு விசேட கழிவு
வழங்கப்படும்.
மக்மிலன் புத்தகசாலை
இல. 3, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.
(சி/4947)


## குஞ்சுக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

மடுப் பகுதிகளில் உள்ள முன்னணிக் காவலரண்களைப் பலப்படுத்துவதில் படையினர் நேற்று முழுநாளும் ஈடுபட்டிருந்ததாகவும் —

இம்மோதல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் 5 உறுப்பினர்கள் உயிரிழந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25- 09- 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org